பாதை - 4 பயணம் - 2 ஆகஸ்டு - 2016

# திசைமானி

ஒன்று கூடிய பயணம்



## இயற்கை செழித்தால் நாமும் செழிப்போம்


**Lesson Ideas :** சேவல் கூவுது

**Lesson Ideas :** Foods we eat

**Teacher Reflections :** இயற்கை

**Teacher Learner :** வகுப்பறையில் வரலாறு

**Resource Catalogue :** Science

# Teachers' Resource Centre - New Arrivals



### Experiments with Magnets

The book explains how people use magnets to create useful tools. Inside the book you will also find interesting experiments and surprising true facts that will amaze you....and learn how to make magnets of your own.



### The Essentials of Vedic Mathematics

Vedic mathematics is an ancient technique consisting of sixteen sutras and sixteen sub-sutras. It simplifies not only the fundamental arithmetic operations, such as multiplications and division, but also more advanced concepts such as simultaneous equations, quadratic equations, the factorization of cubic equations and so ono more advanced concepts such as simultaneous and so on.



### A Children's History of India

Journey through time to visit the baths and places of the first cities of Harappa: the stupas of Ashoka; and the flamboyant courts of the great Mughals, rich in art, culture and architecture. Find out how the revolution of 1857 really started, and march alongside Gandhi on his quest to free India from British rule. Plus, you can learn more about each period of Indian history through exciting 'To Do' activities.



### Kids Encyclopedia collection 2

This video serve as a reference guide with a wealth of information on the world of Animals, Birds and Marine organisms. In this Combo pack of video, you will find basic facts on Animals, Birds, and Sea World that are presented with lively videos and photographs and through these one can become more informed and knowledgeable on these wonderful creations.



### Mother Theresa

This Rookie biography teaches young readers about Mother Teresa. It describes how she dedicated her life to helping the poor in India and how she was awarded the Nobel Peace prize for her work.



### பள்ளி மாணவர்களின் தமிழ்ப்பிழை ஆய்வு

எழுத்துக்களின் வருகை முறையைக் கற்பித்தல் முக்கியமானது. ஆசிரியர் வகுப்பிலும் வகுப்பிற்கு வெளியேயும் மாணவர்களுக்குத் தமிழைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். பரவலாக மாணவர்கள் செய்யும் பிழைகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கான உத்திகளை வழங்கும் விதமாக இப்புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது. பிழைகளின் வகைப்பாடு, வரிவடிவப் பிழைகள், ஒலியனியல் பிழைகள், சந்திப் பிழைகள், உருபனியல் பிழைகள் போன்ற பல பிழைகளை ஆய்வு செய்து, அதற்கான காரணங்களையும், அவற்றை நீக்க மேற்கொள்ள வேண்டிய சில உத்திகளையும் ஆசிரியர் எளியதாக விளக்கியுள்ளார்.



### பறவைகள் அறிவோம்

பறவை இனங்களின் வரலாறு, வளர்ச்சி, சூழலில் அதன்பங்கு போன்ற எண்ணற்ற தகவல்கள் இந்நூலில் அடைகாத்து வைக்கப்பட்டுள்ளன. பறத்தல் நிகழ்வுடன் தொடர்புள்ள இயற்பியல் பற்றியும் பறவைகளின் உடலில் உள்ள வேதிப் பொருட்கள் பற்றியும் அவற்றின் எலும்பமைப்பு, மூளை பற்றிய அறிவியல் செய்திகளையும் ஆசிரியர்கள் ஆய்வறிக்கையாக அளித்துள்ளனர்.



### கதையில் கலந்த கணிதம்

மனித வாழ்வில் கதைகள் மிக அவசியமான ஓர் இடத்தைப் பெறுகின்றன. இப்படிப்பட்ட ஆற்றல் வாய்ந்த கதைகளுடன் கணிதத்தை ஒப்பிட்டு மகிழ வைப்பதே இப்புத்தகத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது.



### பல்லுயிரியம்

மலை, சிறுபுதர், காடு, புல்வெளி, பறவை, மீனினம், கடல், விலங்கு, ஓடை, பூச்சி இவற்றில் ஏதுவொன்றை தொந்தரவு செய்தாலும் இன்னொன்று சரிந்துவிடும்படி பிணைக்கப்பட்டுள்ளது. நம்மைச் சுற்றியுள்ள காட்டுயிர்களையும் கண்ணெதிரில் விரியும் இயற்கைப் பரப்பையும் நேசிக்க அழைக்கும் புத்தகம் இது.

# தலையங்கம்

நமது வகுப்பறையில் நாம் முயற்சி செய்யும் செயல்பாடுகளின் தரத்தை நமக்குத் தெரிவிப்பது நமது மாணவர்கள் தாம். எந்நிமிடமும் விழிப்புடன் உற்றுநோக்கும் நமக்கு, நமது கற்பித்தலுக்கான உடனடி பின்னூட்டம் கிடைப்பது அவர்களிடமிருந்து தான். வேறுபட்ட கற்றல் நிலைகளில் உள்ள மாணவர்கள் அனைவரையும் கற்பித்தல் செயல்பாட்டில் ஈடுபடுத்துவது என்றுமே நமக்கு ஒரு சவாலாக இருந்தபோதிலும், அதுவே நாம் புதிய பல கற்பித்தல் உத்திகளைக் கண்டு பிடிப்பதற்கு ஊக்கியாகவும் இருக்கிறது. வகுப்பறை கற்றலுக்காக ஆக்கப்பூர்வமான யோசனைகளைக் கண்டறியும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். உங்கள் வகுப்பறையை மேலும் உற்சாகமானதாக மாற்ற பல புதிய உத்திகள், யோசனைகள் மற்றும் கருத்துக்களோடு இந்த மாதத் திசைமானி வெளிவருகிறது.

தொடக்க நிலை மாணவர்கள் அடைய வேண்டிய மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல் போன்றவற்றை வளர்க்கும் நோக்கில் எழுத்தப்பட்ட கட்டுரைகளைத் தமிழ் பகுதியில் காணலாம். வேறுபட்ட கற்றல் நிலைகளில் உள்ள மாணவர் அனைவரும் 'வருணனைச் சொற்களைப்' புரிந்து கொள்ளும் வகையில் ஆசிரியை சாந்தகுமாரி பலவகையான கற்பித்தல் உக்திகளைப் பயன்படுத்தியுள்ளார். மாணவர்களிடையே வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதற்கு, காயத்ரி, ராஜகுமாரி, கார்த்திகேயன், மாலதி ஆகிய நான்கு ஆசிரியர்களும் கதை அட்டைகளை உருவாக்கியுள்ளனர். சூழ்நிலையியல் பகுதியில் பரனீஷ்வரி என்னும் ஆசிரியரின் வகுப்பில் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் செய்த பாம்பு பற்றிய ஒரு செயல்திட்டமும் வகைப்படுத்துதல் என்ற பாடப்பொருளை எவ்வாறு ஆர்வமூட்டும் வகையில் கற்பிக்கலாம் என்று ஆசிரியர் ராமகிருஷ்ணன் எழுதிய கட்டுரையும் உள்ளன.

பொருட்களின் வாயிலாக கூட்டலைக் கற்பிக்கும் முறையினை ஆசிரியர் கோமதியும் பத்திலிருந்து இருபதுவரை எண்களைக் கற்பிக்கப் பயன்படுத்திய விளையாட்டுகளை ஆசிரியர் சண்முகப்பிரியாவும் கணிதப் பகுதியில் எழுதியுள்ளனர். நமது வரலாற்று ஆசிரியர்கள் கீழ்வாழை, பனமலை, சிங்கவரம், மண்டகப்பட்டு, தளவனூர், பிரம்மதேசம் போன்ற இடங்களுக்குச் சென்று, வரலாற்றுச் செய்திகளை ஆராய்ந்து தங்களுக்குக் கிடைத்த அனுபவங்களையும் இவ்விதழ் வழி நம்முடன் பகிர்ந்துள்ளனர்.

அனைத்து பாடங்களுக்கும் தேவையான பல்வேறு வளங்களை வகுப்பறை வளப்பையில் காணலாம். தமிழில் வாசித்தல் திறனை மேம்படுத்தக் கதை அட்டைகளும் கணிதத்தில் தொடக்கநிலை குழந்தைகளுக்கு எண்களையும் கூட்டலையும் அறிமுகப்படுத்த கணிதப் பொருட்களும் இதில் அடக்கம். அறிவியலில் விலங்குகளின் வகைப்பாடு மற்றும் தனிம அட்டவணையை மாணவர்கள் மகிழ்ச்சியோடும் ஆர்வத்தோடும் கற்க உதவும் வளங்களும் இதில் உள்ளன.

ஆசிரியர் வட்டத்தின் உறுப்பினர்கள் தங்கள் வகுப்பறை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் வகுப்பறை வளங்களைத் தயாரிக்கவும் தொடர்ந்து சந்தித்து உரையாடிக் கொண்டிருக்கின்றனர். இவ்விதழில் வெளிவரும் கட்டுரைகளையும் வளங்களையும் உத்திகளையும் உருவாக்குவாக்கும் போது, நாங்கள் எந்த அளவு உற்சாகத்துடன் இருந்தோமோ அவ்வாறே இவற்றை வாசிக்கும் போதும் வகுப்பறையில் பயன்படுத்தும் போதும் நீங்களும் உணர்வீர்கள் என்று நம்புகிறோம். தங்களின் மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எங்களுடன் பகிர்ந்து கொள்ள மறவாதீர்.

அடுத்த இதழில் சந்திக்கும் வரை,

ஆனந்தமாக வாசிப்போம்! ஆழ்ந்த புரிதலுடன் கற்பிப்போம்!

திசைமானிக் குழு

# உள்ளடக்கம்

## பாடத்திட்டங்கள்:

இந்தப் பகுதி முழுவதும் புதுச்சேரி ஆசிரியர் வட்டத்தின் உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட பாடத் திட்டங்களும் அவற்றிற்கான வளங்களும் இடம் பெற்றுள்ளன. பாடத்திட்டங்கள் அனைத்தும் 5E கட்டமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பாடத்திட்டங்கள், மாணவர்களின் ஆழ்ந்த புரிதல், சுய சிந்தனை, கற்றலை வாழ்க்கையோடு தொடர்புபடுத்துதல் போன்றவற்றை வளர்க்க ஏதுவான வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

**வகுப்பு 2**

**தமிழ் - சேவல் கூவுது** 5

**தமிழ் - என்னைப் பற்றி நான்!** 8

**ஆங்கிலம் - நீயா ! நானா!** 60

**வகுப்பு 3**

**சூழ்நிலையியல்-நாம் உண்ணும் உணவு** 46

**ஆங்கிலம் - சிறிது சிறிதாக...** 62

**வகுப்பு 4**

**தமிழ் - வழங்கும் தமிழ்** 10

**தமிழ் - இலையும் இறகும் ஒன்றே** 13

**சூழ்நிலையியல்-அனிதாவும் தேனீக்களும்** 48

**வகுப்பு 5**

**தமிழ் - வாழ்வின் வழிகாட்டி** 16

**சூழ்நிலையியல் - தண்ணீரில் பரிசோதனைகள்** 50

**தமிழ் - நேர்மை தந்த பரிசு** 41

**வகுப்பு 7**

**அறிவியல் - வகைப்பாட்டியல்** 90

## வகுப்பறை நாட்குறிப்புகள்

இப்பகுதியில் ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வர்.

**வகுப்பு 1**

**கணிதம் - கூட்டல்** 68

**வகுப்பு 2**

**தமிழ் - வீடு எங்கே** 17

**தமிழ் - தவளையின் தந்திரம்** 20

**ஆங்கிலம் - ஹல்தியின் சாகசப் பயணம்** 63

**கணிதம் - பத்து முதல் இருபது வரை** 71

**வகுப்பு 3**

**சூழ்நிலையியல் - தண்ணீர்! தண்ணீர்!** 52

**ஆங்கிலம் - மாயத் தோட்டம்** 65

**ஆங்கிலம் - பறவை பேச்சு** 67

**கணிதம் - எண்களுடன் வேடிக்கை** 72

**வகுப்பு 4**

**தமிழ் - இயற்கை** 22

**தமிழ் - இயற்கை** 25

**தமிழ் - விண்ணப்பம் எழுதுவோம்** 31

**சூழ்நிலையியல் - விலங்குகளை வகைப்படுத்துதல்** 54

**வகுப்பு 5**

**தமிழ் - காடு எம் வீடு** 36

**சூழ்நிலையியல் - ஒரு பாம்பாட்டியின் கதை** 57

**வகுப்பு 6**

**அறிவியல் - காந்தவியல்** 87

## கற்கும் ஆசிரியர் :

இப்பகுதியில், களப் பயணம், வாசிப்பு, கற்றல் நிகழ்வுகள் போன்றவற்றின் மூலம் தங்களுக்கு கிடைத்த கற்றல் அனுபவத்தை ஆசிரியர்கள் பகிர்ந்துள்ளனர்.

**வரலாற்றை நேரடியாக அறிந்து கொள்ளுதல்** 78

**வகுப்பறையில் வரலாறு** 84

## வளப் பட்டியல்

இப்பகுதி ஒரு குறிப்பிட்ட பாடத்தை நடத்துவதற்குத் தேவையான பல்வேறு வளங்களை கொண்டிருக்கிறது

**கணிதம்** 77

**அறிவியல்** 92

# Editorial

Our students are most often our best judges in letting us know what works best in our classrooms. As vigilant observers, we get instant feedback from children regarding our teaching. It is a constant motivation and challenge to cater to all the diverse needs of the class and yet, that's what keeps us going - the thirst to be innovative. The Teachers' Circle members are constantly at work in trying to come up with creative ideas for the classroom. We are happy to bring out another issue of Thisaimaani that has the ideas that can make your class exciting.

The Tamil section has articles for grades from two to five with an intent to develop skills such as listening, speaking, reading and writing. Santhakumari has shared her reflections of a language class that was taught using multiple strategies to include learners at various levels. Four teachers, Kayathri, Rajakumari, Karthikeyan and Malathy have created story cards for children to kindle interest in reading. In EVS, there are students' projects on animals that was done when Paraneswari taught about snakes to her fifth graders. How to teach classification in an interesting manner is the theme of Ramakrishnan's article.

In the Math section, Gomathy discusses teaching addition using concrete objects and Shanmuga Priya has shared a few games that can be used to teach numbers ten to twenty. Our historian teachers have written their experience of visiting and exploring historically relevant sites like Keezhvazhai, Panamalai, Singavaram, Mandakapet, Thalavanur, and Bhramhadesam.

The TLM kit also has a variety of resources in all subjects. There are story cards to enhance reading in Tamil and Math aids to introduce numbers and addition to primary children. In science, there are resources to teach animal classification and the periodic table in a fun and interesting manner.

Members of the Teachers' Circle have been meeting regularly to discuss their classroom experiences as well as to generate new resources that can be used in the classroom. We hope you enjoy reading and trying out these ideas as much as we enjoyed working on it. Don't forget to send us your feedback and suggestions.

Till next time

Happy reading! Happy teaching!

Team Thisaimaani

## Lesson Ideas

This section is an array of classroom ideas and lesson plans created by the Puducherry Teachers' Circle. They have been created using the 5E framework to encourage independent thinking, conceptual understanding and real life application of classroom learning.


**Grade 2**

**Tamil - Seval Koovuthu** 5
**Tamil -Ennai Patri naan** 8
**English - The wind and the sun** 60

**Grade 3**

**EVS - Foods we eat** 46
**English - Little by little** 62

**Grade 4**

**Tamil - Vazhangum thamizh** 10
**Tamil - Illayum Irakum Ondre** 13
**EVS - Anita and the Honeybees** 48

**Grade 5**

**Tamil - Vaazhvin Vazhikaatti** 16
**EVS - Experiment with water** 50
**Tamil - Nermai Thantha Parisu** 41

**Grade 7**

**Science - Basis of Classification** 90


## Teacher Reflections

In this section teachers share their classroom experiences.


**Grade 1**

**Maths - Addition** 68

**Grade 2**

**Tamil - Veedu enge** 17
**Tamil - Thavalayin Thanthram** 20
**Englsih - Haldi's Adventure** 63
**Maths - Ten's to twenty** 71

**Grade 3**

**EVS - Water O' Water** 52
**English - Magic Garden** 65
**English - Bird Talk** 67
**Maths - Fun with number** 72

**Grade 4**

**Tamil - Iyarkai** 22
**Tamil - Iyarkai** 25
**Tamil - Vinnappam ezhuthuvom** 31
**EVS - Ear to ear** 54

**Grade 5**

**Tamil - Kaadu em veedu** 36
**EVS - Snake charmers story** 57

**Grade 6**

**Science - Magnetism** 87


## Teacher Learner

This section includes learning experiences of teachers from an exposure visit or a striking episode in the classroom and similar others.


**Learning History through field trip** 78
**History in Classroon** 84


## Resource Catalogue

This section suggests various resources that can be used to teach a particular lesson.


**Maths** 77
**Science** 92

# சேவல் கூவுது!

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 2, பருவம் 1, பாடம் 8**

**மாணவர்கள் சேவலாய் கூவி, மீனாய் நீந்தி ஓவியனாய் வரைந்து... மகிழ்ந்தனர்!**

இரா. கார்த்திகேயன்
சே. மாலதி

**பாடம் பற்றி** :

வாணிதாசன் அவர்கள் எழுதிய “சேவல் கூவுது” என்ற பாடம் - ஓசை நயமிக்க குழந்தைப் பாடல்களைக் கேட்டல், படத்தைப் பார்த்து பெயரைச் சொல்லுதல், எதுகை மோனை நயத்துடன் பாடலைக் கற்பித்தல் ஆகிய திறன்களை உள்ளடக்கியுள்ளது.

**கற்றல் கற்பித்தல் கருவிகள்**:

- செயல் திட்டம் - 10 நாட்களுக்கு
- ல, ள பயிற்சி - போஸ்டர்
- படக் கதை - வாசிப்பிற்கு
- பயிற்சித் தாள் இணைக்கப்பட்டுள்ளது

**செயல் குறிப்பு** :

இப்பாடத்திற்கு 10 பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு பாடவேளையை இரு பகுதியாக 20 நிமிடங்கள் பகுதி ஒன்றுக்கு 20 நிமிடங்கள் பகுதி இரண்டுக்கு என பிரித்து இரண்டுவகையான தொடர் செயல்பாடுகளை செயல்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. பகுதி -1 நேரடியாக பாடத்திட்டம் சார்ந்தது. பகுதி-2 பாடத்தை ஆழ்ந்து கற்கவும், செயல்பாட்டுடன் கற்கவும் உதவுவது. மாணவர்களை இரு குழுவாகப்பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் தனித்தனி செயல்பாடு தரவேண்டும். இங்கு ஒரு குழுவுக்கு சேவல் என்ற தலைப்பும் மற்றொரு குழுவுக்கு மீன் என்ற தலைப்பும் வழங்கப்பட்டுள்ளது.

(பகுதி 1 பாடத்தினை நேரடியாகக் கற்க, பகுதி 2 மாணவர்கள் பாடம் சார்ந்த செயல்பாட்டிற்கானது. இவற்றை ஒரு திட்ட செயல்பாடாக 10 நாட்களும் செய்ய வேண்டும். அதற்குத்தேவையான அட்டைகள், கலர் பென்சில்...போன்றவற்றை தயார் செய்தல் வேண்டும். குழந்தைகள் சுதந்திரமாக சிந்தித்து வரைய, எழுத, பாட...அனுமதிக்க வேண்டும். அவர்கள் செய்தவற்றை பத்திரப்படுத்திக் கொண்டே வரவேண்டும். அப்பொழுது வகுப்பறைக் காட்சியாக, பள்ளிக் கண்காட்சியாக வைக்கலாம்)

**நாள் -1 பகுதி - 1**

- சில விலங்குகளின் பெயர் அல்லது படத்தைக் காட்டி அவை கத்துவதுபோல் கத்தச் செய்தல் மற்றும் அவைகளின் உணவு பற்றி அறிதல்.

**பகுதி -2**

குழு 1 சேவல் வரைதல்



குழு 2 மீன் வரைதல்



**நாள் - 2 பகுதி-1**

• போஸ்டரில் உள்ள “வெல்லம் தின்றால் ஜாலி” பாடலை மாணவர்கள் உரிய ஒலிப்புடன் பாட வைக்கலாம்.

• ABL அட்டையில் உள்ள வெள்ளம், வெல்லம், வாள், வால் போன்ற வார்த்தைகளைக் காட்டி ஒலி தொடர்பான வேறுபாடுகளையும் உச்சரிப்புகளையும் விளக்கலாம்.

**பகுதி- 2**

குழு 1: சேவலை அதன் வீட்டோடு வரைதல்
குழு 2: மீனை அதன் வீட்டோடு வரைதல்





**நாள் - 3 பகுதி -1**

• முதல் இரண்டு நாட்கள் பழகிய வற்றை ஒவ்வொருவரும் வகுப்பறையில் செய்து பார்த்தல்.

• ஒவ்வொருவரும் விலங்குகளைப் போல் ஒலி எழுப்புதல். உ.ம் - ஆடு என்று குறிப்பிட்டால் ஆடு போல் கத்துதல்ஞ்இவ்வாறு தொடரலாம்.

• ல ள ழ ந ன ண வேறுபாடுகளைத் தெளிவு படுத்தலாம்.

• அதோடு நாம் எழுதிய வார்த்தைகளுக்கு அதே உச்சரிப்புடைய வேறு வார்த்தைகளைக் கண்டு பிடித்தல். இதை பயிற்சித்தாளாக வழங்க வேண்டும். கிளி, எனஞ்பயன்படுத்தலாம்.

**பகுதி - 2**

• குழு 1 சேவல் எதையெல்லாம் சாப்பிடும் என கண்டுபிடித்து வந்து எழுதுதல்

உம், புழு தின்னும்

புல்லு தின்னும்

• குழு 2 மீனின் சாப்பாட்டை எழுதுதல்

மீன்: பாசி தின்னும்
மீனை தின்னும்

**நாள் - 4 பகுதி -1**

பாடப்புத்தகத்தில் உள்ள ”சொல்லிக்கொண்டே எழுதுக “ - எழுத வைத்தல்.

**பகுதி-2**

• குழு 1 சேவல் என்னென்ன செய்யும்?

• கொத்தும்
• கத்தும்
• ஓடும்

• குழு 2 மீன் என்னென்ன செய்யும்?

• நீந்தும்
• குடிக்கும்

**நாள் - 5**

**பகுதி** 1- பாடல் பொருள் பற்றி உரையாடுதல்

• பாடலை வாசித்துக் காட்டுதல்

• பாடல் பொருளுக்கான செயல்பாடுகளைச் செய்ய வைத்தல்

• பாடல் பாடுதல்.

**பகுதி-2**

• குழு 1 சேவலை ஏன் வளர்க்கிறோம்

சாப்பிட

விற்க

குழு 2 மீனை ஏன் பிடிக்கிறோம்

**நாள்- 6**

- பகுதி-1 பாடலை தனித் தனியாக பாடுதல்
- பாடலை செயலுடன் பாடுதல்.
- பாடலை சேர்ந்து பாடுதல்
- பாடலை வெவ்வேறு இராகத்துடன் பாடுதல்

**பகுதி-2**

- குழு 1 சேவல் தோற்றம்

கொண்டை இருக்கும்
ரக்கை கலராக இருக்கும்

- குழு 2: மீன்வகைகள் மற்றும் தோற்றம்

கானாங்கழுத்த - சின்னதாக இருக்கும்

**நாள்** - 7

- பகுதி-1 தொடர்புடைய வேறு பாடல்களைப் பாடுதல்.
- படித்து மகிழ்க பகுதியில் உள்ள கதையைப் படிக்க வைத்தல்.
- இது போன்ற கதை அட்டையில் உள்ள கதைகளை வாசிக்க வைக்கலாம்.

**பகுதி-2**

- குழு-1 சேவலுடன் என்னவெல்லாம் செய்வாய்

விளையாடுவேன்

சாப்பாடு குடுப்பேன்

- குழு-2 மீனுடன் என்னவெல்லாம் செய்வாய்

**நாள்** - 8 **பகுதி**-1

எழுத்துக்களை இணைத்து சொல் உருவாக்குக - பாடத்திலுள்ள பயிற்சிகளை அளித்தல். பயிற்சித்தாள் தயாரித்து வழங்குதல்.

**பகுதி-2**

- சேவல் கதைகளைக் கேட்டு வருதல்
- மீன்கதைகளைக் கேட்டுவருதல்

**நாள்** 9

- பகுதி -1 பாடப் பயிற்சி மற்றும் பயிற்சித்தாளை வழங்குதல்.
- பகுதி 2 குழு ஒன்று மற்றும் இரண்டின் வேலைகளை அடுக்கிக் காட்சியாக வைத்தல்.

வித்தியாசமாக பாடத்தைக் கற்பிக்கலாம் என்ற முறையில் இப்பாடத்திட்டத்தை அமைத்துள்ளோம். செய்து பார்த்து நன்மை தீமைகளை புரிந்துகொள்வோம்.




**இரா. கார்த்திகேயன்**, தொ.ப.ஆ, அ.தொ.ப. நரம்பை



**சே. மாலதி**, தொ.பா.ஆ, அ.தொ.ப. கணபதி செட்டிகுளம்

Lesson Ideas

# என்னைப் பற்றி நான்

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 2, பருவம் 1, பாடம் 7**

சி. தமிழ்செல்வி
ஆ. மஹேஸ்வரி

**என்னையும் அறிமுகப் படுத்துவேன்!**
**உன்னையும் அறிமுகப் படுத்துவேன்!**

**பாட நோக்கம்:**

- மாணவர்கள் தங்களைப்பற்றி அறிமுகம் செய்துகொள்ளத் தெரிதல்
- மற்றவர்களை அறிந்துகொள்ளுதல், புது வார்த்தைகளையும்,
- பெரிய வார்த்தைகளையும் படிக்கத்துவங்குதல்.
- பேசும் திறனையும் வாசிக்கும் திறனையும் மேம்படுத்துதல்

போன்ற திறன்களை மையமாகக் கொண்டது.

**பாடச்செயல்படுகள்:**

**செயல்பாடு -1**

• ஆசிரியர் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு அதைப்போல ஒவ்வொரு மாணவர்களும் தன்னை அறிமுகப் படுத்திக்கொள்ளுதல். ஆசிரியர் தன்னை இரண்டாம் வகுப்பு நிலையிலிருந்து அறிமுகப் படுத்திக் கொள்ளுதல்.

**செயல்பாடு - 2**

• அவர்கள் தங்களை வரைதல்.

• தங்களைப் பற்றிய குறிப்புகளை வரைய முயற்சிக்கலாம். (உம்) எனக்கு ஓடி விளையாட புடிக்கும் என்று குறிப்பிட்டால் அதையே வரைய முயற்சிப்பது.

**செயல்பாடு-3**

• விலங்குகள் பற்றிய படப் புத்தகம் உருவாக்குவது. ஆசிரியர் மாணவர்களுடன் அமர்ந்து மாதிரி படப் புத்தகம் தயாரித்துக் காட்டி, பின் அவர்களை தயாரிக்க வைக்கலாம். ஒரேமாதிரி படங்களை வாங்கி ஒட்டாமல் வெவ்வேறு பத்திரிக்கைகளிலிருந்து வெவ்வேறு உருவங்களை சேகரிக்க உதவுதல்.

**செயல்பாடு - 4**

• விலங்குகள் பற்றிய பாடல்கள், போஸ்டராக இணைக்கப் பட்டுள்ளன. அவற்றை வாசிக்க வைத்தல் பாடவைத்தல் என பயிற்சி அளிக்கலாம்.



**சி. தமிழ்செல்வி**, தொ.பா.ஆ, அ.தொ.ப. சின்ன காலாப்பட்டு



**ஆ. மஹேஸ்வரி**, தொ.பா.ஆ, அ.தொ.ப. பெரியார் நகர்



என் பெயர் ----------------------------

நான் --------------------------------வகுப்புப் படிக்கிறேன்

எனக்கு ---------------------------- தெரியும்.

என்னால் ------------------------------ முடியும்.

நான் ---------------------- ஏறுவேன்.

எனக்கு --------------------- இருக்கிறது.

என்னை ------------------ புடிக்கும்

நாந்தானே நாந்தானே!

தாவிக் குதித்துப் போவேனே!

நாந்தானே நாந்தானே!

கொர்ர்ர்ர்ர்ர்ர்ர் சத்தம் போடுவேனே!

தரையிலுமிருப்பேன் தண்ணியிலுமிருப்பேன்.

தவளையார் நாந்தானே!



Lesson Ideas

# வழங்கும் தமிழ்

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 4, பருவம் 1, பாடம் 4**

**"சென்று பார்ப்போம் உரையாடுவோம்,**
**வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வோம்"**

மு. சாந்தகுமாரி

## பாட நோக்கங்கள்:

- மீனவர்களின் பேச்சு முறை, பழக்கவழக்கங்கள், கலாச்சாரம், வழிபாட்டுமுறை, பாரம்பரிய விளையாட்டுக்கள்போன்றவற்றை அறிதல்.

- மாணவர்கள் தங்கள் சூழலில் உற்றுக்கேட்ட விவரங்களைப் புரிந்துகொள்ளுதல் / அதைப்பற்றிக் கட்டுரை எழுதுதல்.

## பாடச் செயல்பாடுகள்:

**மாணவர்களைத் தயார்படுத்துதல்:**

- வகுப்பறையில் மாணவர்களோடு உரையாடுதல்: மீன் நமக்கு எங்கிருந்து கிடைக்கிறது? யார் கொண்டு வந்து தருவார்? என்னென்ன மீன்களைப் பார்த்து இருக்கிறீர்கள்? கடலில் மீன்களைத் தவிர வேறு என்னென்ன பொருள்கள் இருக்கும்? போன்ற வினாக்களை எழுப்பி மாணவர்களின் கடல் சார்ந்த அறிவைத் தெரிந்து கொள்ளுதல். மாணவர்கள் கூறுவதைக் கரும்பலகையில் எழுதுதல்.

- கூடை பின்னும் ஒயரைக் கொண்டு மீன்கள் செய்தல்.

- மீனவர்களின் பேச்சுவழக்கில் உள்ள வார்த்தைகளை மாணவர்கள் அறிந்துள்ளனரா என்பதை ஆசிரியர் தெரிந்து கொள்ள, புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள புதிய வார்த்தைகளையும் அவற்றிற்கேற்ற படங்களையும் காட்டி வினவுதல். மாணவர்களுக்குத் தெரியாத வார்த்தைகளை ஆசிரியர் குறித்து வைத்துக்கொண்டு, பாடம் நடத்தும் போது அவ்வார்த்தைகளுக்குப் பொருள் அறியச் செய்தல்.

**பாடப்பொருளைப் புரிந்துகொள்ளுதல்:**

- ஆசிரியர், பாடத்தில் உள்ள புதிய வார்த்தைகளைப் பயன்படுத்திப் பாடக்கருத்தை மையமாகக் கொண்டு ஒரு கதை கூறுதல். பல்லாங்குழி, பாண்டி போன்ற விளையாட்டுக்களை மாணவர்கள் விளையாடுதல். மெரினா கடற்கரை, வானொலி நிலையம், சிலம்பாட்டம், புலியாட்டம் போன்றவற்றை வீடியோவாகக் காண்பித்தல்.

- ஆசிரியர் பாடத்தை வாசித்துப் பாடப்பொருளை விளக்குதல். மாணவர்களின் வாசிப்புத் திறனை அறிய ஆசிரியர் 'தொடர் வாசிப்பு' முறையைப் பயன்படுத்தலாம்.

- மாணவர்கள் அனைவரும் பாடத்தை வாசித்தல். வாசிக்கச் சிரமப்படும் மாணவர்கள் ஒலிப்புத்தகத்தைக் கேட்டுக்கொண்டே வாசிக்க முயல வேண்டும்.

- மீனவர்களின் வாழ்க்கை முறையைப் பற்றி மாணவர்கள் மேலும் புரிந்துகொள்ள அவர்களைக் கடற்கரைக்கு அழைத்துச் செல்லலாம். அங்கு மீனவர்களுடன் கலந்துரையாடி நேரடி அனுபவத்தைப் பெறச் செய்யலாம். (நேர்காணலுக்கான யோசனைகள் சில கீழே

**நேர்காணலுக்கான சில யோசனைகள்:**

மீனவர்களின் வாழ்க்கை முறை கடலையும் மீன்பிடி தொழிலையும் சார்ந்திருப்பதால், நேர்காணலுக்கான கேள்விகளைக் கீழ்க்காணும் பகுதிகளை மையப்படுத்தி வடிவமைக்கலாம். (இது ஒரு மாதிரியே)

**மீனவர்களுடன் நேர்காணல்**

**மீன்கள்:**

- மீன்களின் வகைகள்
- ஒரு நாளுக்கு எவ்வளவு மீன்களை விற்பீர்கள்? (விலை, அளவு, வருமானம்..)
- அந்தப் பகுதியில் கிடைக்கும் பெரிய /சிறிய மீன் எது?

-???

**கடற்கரை:**

- காலார நடந்து செல்லும்
- கடலோர சாலை
- கடற்கரை விளையாட்டுக்கள்

-???

**மீனவர்களின் வாழ்க்கை முறை:**

- எந்த நேரத்தில் கடலுக்குள் செல்வீர்கள்?
- ஒரு நாளைக்கு எவ்வளவு மீன் கிடைக்கும்?
- மீன்பிடித்த நேரம் போக மீதி நேரங்களில் என்ன செய்வீர்கள்?
- கடல் நீரைக் குடிப்பீர்களா?
- மீன் பிடித்தல், வலைபின்னுதல் போன்றவற்றை எவ்வாறு கற்றீர்கள்?

**மீன்பிடிக்கும் முறைகள்:**

- படகு - வகைகள், எதனால் செய்யப்பட்டது
- வலை
- துடுப்புகள்
- மீன்பிடிக்கும் முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?

**வாழ்விடம் மற்றும் கலாச்சாரம்:**

- பண்டிகைகள் / விழாக்கள்
- மொழி
- விளையாட்டுகள்
- பாரம்பரிய பாடல்கள், கதைகள், நம்பிக்கைகள்..
- ???

கொடுக்கப்பட்டுள்ளன).

**தொடர்பணி**:

• கடற்கரையிலிருந்து மாணவர்கள் சேகரித்து வந்த சோழிகள் மற்றும் கிளிஞ்சல்களைக் கொண்டு கலைப்பொருட்களைச் செய்யத் தூண்டுதல்.

• பாடத்தின் ஒவ்வொரு பகுதியையும் ஒவ்வொரு குழுவாக நடித்துக் காட்டுதல்

• **செயல்திட்டம்**: மீனவர்களைச் சந்தித்ததுபோல், மாணவர்கள் தங்களின் வீட்டிற்கு அருகில் உள்ள குயவர், விவசாயி, தையல்காரர் போன்றோரின் வாழ்க்கை முறையை அறிந்து அதை ஒரு கட்டுரையாக எழுதுதல். மாணவர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ வினாக்களைத் தயாரித்து நேர்காணல் செய்து கட்டுரை எழுதுவது நலம். மாணவர்கள் அறிமுகம் இல்லாத மனிதர்களைச் சந்திக்கும் போது எவ்வாறு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதையும் ஆசிரியர் வகுப்பறையில் உரையாடுவது அவசியம்.

## மதிப்பிடுதல்:

• **பணித்தாள்கள்**:

• பொதுத்தமிழ் வார்த்தைகளுக்கான வழக்குத் தமிழ் சொற்களை எழுதுதல்.

• படத்திற்கேற்ற பொதுத்தமிழ் சொற்களையும் வழக்குத் தமிழ் சொற்களையும் எழுதுதல்

வளப்பையில் காணப்படும் வகுப்பறை வளங்கள்:

1) பாடத்தில் உள்ள புதிய சொற்களும் அவற்றிற்கான படங்களும்

2) பாடத்தில் உள்ள புதிய சொற்களையும் மையக்கருத்தையும் கொண்டு வடிவமைக்கப்பட்ட கதை.

3) பாடத்திற்கான ஒலிப்புத்தகம்

4) கிளிஞ்சல்களையும் சோழிகளையும் கொண்டு செய்யப்பட்ட கலைப்பொருட்களின் மாதிரிகள் (படங்களாக)

5) பணித் தாள்கள்



**மு.சாந்த குமாரி**, தொ.ப.ஆ, அ.தொ.ப. முருங்கப்பாக்கம்

# இறகும் இலையும்

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு** 4, **பருவம்** 1, **பாடம்** 6



நல்.கருணாநிதி
வா.வீரப்பன்

**உவமையும் ஒப்பீடும்**
**கதையும் பாடலுமாய் பாடத்தில்...**

**செயல்பாடு**: 1

இதுவும் அதுவும் ஒன்றே என்ற உவமைகள் சிலவற்றை குறிப்பிட்டு உரையாட வேண்டும். பின் மாணவர்களைச் சொல்லச் சொல்லவும். அதுபற்றிய உரையாடலை நிகழ்த்தவும். அதோடு மாணவர்கள் அவர்களுக்குத் தெரிந்த உவமைகளைக் கண்டுபிடித்து போஸ்டர் செய்யும்படி செய்யவும்.

**செயல்பாடு**: 2

கதை கூறுதல். "ஒரு தாத்தா தன்னுடைய நாய்க் குட்டியுடன் நகரத்திற்கு வந்திருந்தார். துணிக்கடைக்கு சென்றிருந்தார். அப்பாவுடன் கடையில் இருந்த மாலா அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். மாலாவும் நாயும் விளையாடினர். தாத்தாவிடம் கெஞ்சி நாய்க் குட்டியை வாங்கிக் கொண்டாள். நாய் அவளுடன் மகிழ்ச்சியாக வளர்ந்தது. ஒரு நாள் அந்த நாயைக் காணவில்லை. அதைத் தேடிக் கண்டு பிடித்தபொழுது, அதைக் காவலர்கள் கொண்டு சென்றனர். அது நரி என்று மக்கள் பயந்து போய் காவலர்களை வரவழைத்திருந்தனர். நாய் நரியானதை மாலாவால் நம்பவே முடிய வில்லை."

**செயல்பாடு**: 3

பாடத்தை வாசித்தல், பாடத்திற்கு விளக்கமளித்தல், பாடத்தைப் பற்றி உரையாடுதல்.

**செயல்பாடு**: 4

பாடக்கதையை நாடகமாக்கி நடிக்க வைக்கலாம். பாடலாக்கி பாடவைத்தல்.

**செயல்பாடு**: 5

விடுகதையை வகுப்பறை நிகழ்வாக்குதல். இரு குழுவாக மாணவர்களைப் பிரித்து ஒரு குழு கேள்வி கேட்டல் மற்றொரு குழு விடுகதையை வெடித்தல் என்பதாக இருக்கும். அல்லது நான்கு நபர்களுடைய குழுவாகப் பிரிந்து விடுகதை சேகரித்து சேகரித்த விடுகதையை வகுப்பறையில் மற்றவர்களுக்குமுன் வந்து பகிர்ந்துகொள்ளுதல்.





# இதுவும் அதுவும் ஒன்றே

- விளக்கும் சூரியனும் ஒன்றே!
- பூனையும் புலியும் ஒன்றே!
- கடலும் வானமும் ஒன்றே!
- புல்லும் வாளும் ஒன்றே!
- தோகையும் விசிறியும் ஒன்றே!
- கல்லும் பல்லும் ஒன்றே!
- பனையும் தென்னையும் ஒன்றே!
- நிலவும் முகமும் ஒன்றே!
- கரும்பும் மூங்கிலும் ஒன்றே!
- குளமும் குட்டையும் ஒன்றே!
- தேரும் காரும் ஒன்றே!
- காலும் தூணும் ஒன்றே!
- நாயும் நரியும் ஒன்றே!

# விடுகதைகள்

1) கொம்பு நிறைய கம்பு - அதுஎன்ன?

2) எழுதியே எழுதியே தேஞ்சி போனான் - அவன் யார்?

3) பூ கொட்டக் கொட்ட பொறுக்க முடியவில்லை-அது என்ன?

4) இரு கொம்புகளுண்டு மாடல்ல வேகமாய் ஓடும் மானல்ல - அதுஎன்ன?

5) இரவு வருவான். இருப்பான், விடிந்ததும் ஓடிவிடுவான். அவன் யார்?

6) ஊரெல்லாம் வம்பளப்பான் , ஓர் அறையில் அடங்குவான். - அது என்ன?

7) தங்கச்சி விளக்கு காட்டுவாள். அண்ணன் மத்தளம் அடிப்பான், அம்மா தண்ணீர் தெளிப்பாள். யார் அவர்கள்?

8) வந்தால் கொண்டாட்டம், வராவிட்டால் திண்டாட்டம்

9) ஆடி ஆடி நடப்பான்!

அமைதியாக அதிர வைப்பான். அவன் யார்?

10) செய்வதை செய்வான், சொன்னதை செய்ய மாட்டான் - அது என்ன?

11) கடலிலே கரைந்து கரையிலே பிரிந்து தெருவிலே திரியும் பூ என்ன பூ?

12) உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன் - அவன் யார்?

13) ஊசி போட்ட வைத்தியர் ஊமை போல போகிறார். யார் அவர்?

14) பகலில் துயிலுவான் இரவில் அலறுவான் - அவன் யார்?

**பதிலை தேடி எடுக்கவும்**

(மழை, யானை, கண்ணாடி, உப்பு, எறும்பு, தேனி, அந்தைமாதுளம் பழம், பென்சில், மழை, சைக்கில், நிலவு. தொலை பேசி, (மின்னல் இடி மழை)



**நல். கருணாநிதி**, தொ.ப.ஆ, அ.தொ.ப. பெருங்களூர்



**வா. வீரப்பன்**, தொ.ப.ஆ, அ.தொ.ப. அய்யங்குட்டிபாளையம்

# வாழ்வின் வழிகாட்டி

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 5, பருவம் 1, பாடம் 2**

**"ஒப்பிட்டறியும் விதம் கண்டோம்,**
**ஒவ்வொன்றிலிருந்தும் இனி கற்போம்"**

சு.கவிதா

**பாடநோக்கங்கள்:**

- வாழ்வியல் மதிப்புகளை வளர்த்தல்.
- இருவேறு பொருள் / சூழல்களுக்கிடையே உள்ள ஒற்றுமை-வேற்றுமைகளை அறிய கற்றுக் கொள்ளுதல்.

**பாடச்செயல்பாடுகள்:**

- **மொழி விளையாட்டு** : ஏதேனும் ஒரு பொருளைக் கூறி அதற்கு இணையான வேறு ஒரு பொருளைக் கூறச் செய்தல்.
- **குழு உரையாடல்:** யாரிடமிருந்தாவது எதையாவது கற்றுக் கொண்டீர்களா என்று மாணவர்களுடன் உரையாடுதல். மேலும் எதிலிருந்தும் / யாரிடமிருந்தும் கற்கும் மனப்பான்மையை வளர்த்தல்.
- **இரு பொருட்களை ஒப்பிடுதல்:** ஆசிரியர் பாவேந்தரின் 'கல்வியில்லா பெண்கள் களர்நிலம் போன்றவர்' என்ற பாடல் வரியினைக் கொடுத்து கல்வியில்லா பெண்களுக்கும் களர் நிலத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமை-வேற்றுமைகளை மாணவர்களோடு சேர்ந்து அட்டவணைப் படுத்துதல்.
- **ஆசிரியர் மாதிரி வாசிப்பு:** ஆசிரியர் பாடப் புத்தகத்தில் உள்ள கதையைத் தகுந்த ஏற்ற இறக்கத்துடனும் உணர்வுகளோடும் வாசித்தல்.
- **மாணவர் வாசிப்பு:** மாணவர்கள் குழுவாக அமர்ந்து கதையை வாசித்தல். பிறகு ஒவ்வொரு குழுவும் மனிதனுக்கும் பென்சிலுக்கும் இடையே உள்ள தொடர்பினை அட்டவணைப் படுத்துதல்.
- **பணித்தாள்:** இரட்டுற மொழிதல் பாடல்களிலிருந்து ஒருசில பாடல்களின் பொருளைக் கொடுத்து பாடலில் பயின்று வரும் இரு பெயர்களைக் கண்டு பிடிக்கச் செய்தல். அவற்றின் ஒற்றுமை-வேற்றுமைகளைத் தனித்தனியே எழுதுதல். (உ.ம்.)

**இரட்டுற மொழிதல்** (உ.ம்.)

கதவு: வீட்டின் உள்ளிடத்தை தடுத்து மூடியிருக்கும்; பொருத்தமான பலகைகளைக் கொண்டு முட்டிச் செய்யப்படுகிறது; கதவின் பின்புறம் தாழ்ப்பாள் பிணைப்பாக போடப்பட்டிருக்கும்; அழகான நிலை(வாசற்படி) யினைக் கொண்டிருக்கும்.

ஆடு: வயலில் கிடையாக மறிக்கப்படுகிறது; பலர் கைகளால் தடுக்கும் போதும் ஆடு முட்டும் குணமுடையது; தன்னைத் தாக்குபவரை எதிர்த்துத் தாக்கும்; தூய்மையான தங்குமிடத்தைத் தேடிக் கொள்ளும்.

(இதுபோன்ற பாடல் கருத்துக்களின் தொகுப்பை வகுப்பறை வளப்பையில் காணலாம்)



**சு. கவிதா**, தொ.ப.ஆ, அ.தொ.ப. மணவெளி (அ)

# வீடு எங்கே?

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 2, பருவம் 1, பாடம் 6**

**விளையாட்டும் பாடலும் இணைந்து கற்க ஏதுவானதாகிறது!**

சி. தமிழ்ச் செல்வி

வீடு எங்கே பாடம் , மாணவர்கள் கேள்வி கேட்பதற்கான வார்த்தைகளைப் புரிந்து கொண்டு கேள்வி கேட்டுப்பழகுதல்.கதைகளை அறிதல், சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல், கதை கூறும் ஆர்வத்தைத் தூண்டுதல், விலங்குகள்,பழங்கள், காய்கறிகளை அறிதல் போன்ற பாடநோக்கங்களைக் கொண்டது. பாடத் தயாரிப்பாக வெவ்வேறு செயல்பாடுகள் மற்றும் கற்றல் கருவிகளுடன் வகுப்பறைக்குச் சென்றிருந்தோம்.

**பகுதி -1 கேள்வி கேட்கும் திறன்:**

• குழந்தைகளைக் கற்றலில் ஈடுபடுத்த பட அட்டைகளைக் கொடுத்து , அதைக் காட்டி என்னிடம் கேள்வி கேட்க வேண்டும். இது என்ன அட்டை ? இந்த பழத்தின் பெயர் என்ன? இதை சாப்பிட முடியுமா? போன்ற கேள்விகளைக் கேட்டனர்.

• கேள்விகளை புரிந்துகொள்ள இச்செயல்பாடு போதாதென்று தோன்றியதால் மாணவர்கள் இயல்பாக புரிந்து கொள்ளும் படியான விளையாட்டுப் பாடல்களை பாடவைத்தேன்.



மழையே மழையே ஏன் பெய்த?

புல்லு வளர நான் பெய்தேன்.

....

.... பாடலைப் பாடினோம்.

• அதற்கடுத்து கீழ்கண்ட பாடலை பாடி உறையாடல் மேற்கொண்டேன்.

தாத்தா தாத்தா மணி என்ன?

ஒண்ணு

தாத்தா தாத்தா மணி என்ன?

இரண்டு

----------

-----------

-----------

தாத்தா தாத்தா எங்க போறீங்க?

கடைக்கு
என்ன வாங்க?
சீப்பு வாங்க
சீப்பு எதுக்கு?
தல சீவ
முடி இல்லையே? எப்படி சீவுவீங்க

உங்கள சீவுவேன்னு ( தாத்தா கத்திகிட்டே ஓடி பிள்ளைகள புடிப்பது போல் புடித்து விளையாண்டனர். இந்த விளையாட்டை வகுப்பறைக்குள் விளையாடிய பிறகு , மாணவர்களைக் கேள்வி கேட்கச்செய்தோம்

அப்பொழுது அவர்கள் கேட்ட கேள்விகளில் ஒரு சில இங்கு உள்ளன.)

எங்க வீட்ல கரண்டு ஏன் இல்ல?

நான் எப்ப வாத்தியார் வேலைக்கு போவேன்?

என்னைக்கு மழை வரும் ? என்பது போன்ற பல கேள்விகளைக் கேட்டனர்.

**பகுதி -2 கதை அறிதல் திறன்:**

மாணவர்களிடம் கதை அட்டைகள் கொடுக்கப் பட்டன. அதில் ஒன்று **"விட்டுக்கொடுக்கும் ஆடு கதை. மற்றொன்று. விட்டுக் கொடுக்க மறுக்கும் ஆடு"**. ஆறு அட்டைகளை வரிசைப் படுத்தினால் கதை கிடைக்கும். அதை வரிசைப் படுத்திக் காட்ட வேண்டும். ஈடுபாட்டுடன்செய்தனர்.. பின் அக்கதையை பொதுவில் இரு மாணவர்கள் கூறும்படி செய்தேன். அது முடிந்ததும் கதையில்



யார் யார் உள்ளனர். என்ன தெரிந்து கொண்டனர். என்பது போன்ற உரையாடல் நடைபெற்றது. கதையின் கருத்தைக் கூறச்செய்தல், கதை அட்டைகளை சரியாக அடுக்கி வைத்தல், போன்ற நுட்பங்களைப் பெற்றனர்.

- கதை அட்டையை வரிசைப் படுத்தி பின் கதை சொல்லவைக்கும்பொழுது கொஞ்சம் கடினமாக இருந்தது. என் வகுப்பறையில் 27 மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கற்றுக்கொடுக்க இது சிறந்த முறையல்ல என யோசித்தேன். இச்செயல்பாட்டை குழு வேலையாகக் கொடுத்திருந்திருக்கலாம்.

**விளக்கமளித்தல்:**

- புத்தகத்தைத் திறந்து வைத்து வீடு எங்கே பாட்டைப் படித்தோம். மாணவர்களுக்கு சுலபமாகவே புரியும்படி இருந்தது.

வீடு எங்கே பாடத்தில் பாடமாக உள்ள வீட்டைக் கட்டுவதற்கு வெவ்வேறு வகையான பொருட்களை (தோசை, வாழைப் பழம், முறுக்கு , அப்பளம்ஞ்) எடுத்துச் சென்றிருந்தேன். சந்தோஷமாக சேர்ந்து வீடு கட்டினோம். வீடு கட்டி அப்பொருட்களை எடுத்து சாப்பிட்டோம்.

- பாடலை இராகமாகப் பாடினோம்.

**விரிவாக்குதல்:**




- பூனை ,எலி, குரங்கு போன்ற படங்களை வரைந்து எடுத்துச் சென்றிருந்தேன் . அங்கு அதை விரித்து வைத்தேன்.

பூனை என்ன செய்யும்?

பால் குடிக்கும்.

தூங்கும்

ஏறிக் குதிக்கும்

- அதே போல் ஒவ்வொரு விலங்குகளின் செயல்பாடு அது கத்தும் சத்தம் ஆகியவற்றைப் பற்றி பேசினோம்.

**மதிப்பிடுதல்:**

பயிற்சித்தாள் தயார் செய்து எழுத வைத்தேன்.

**பாட அனுபவம்**:

- என் வகுப்பறையில் 27 குழந்தைகள் இருக்கின்றனர். ஒவ்வொரு குழந்தையின் செயல்பாட்டிலும் தனிக் கவனம் செலுத்துவது என்பது கடினமான ஒன்றாகவே இருக்கிறது.

- கதை அட்டை, பாட்டு, விளையாடுதல் போன்றவற்றின் துணையோடு சில திறன்களை சுலபமாகக் கற்றுக்கொள்ள முடிந்தது.

- விளையாட்டும் பாட்டுமாய் வகுப்பறை மகிழ்ச்சியாக இருந்தது. மற்ற வகுப்பு மாணவர்கள் எங்கள் வகுப்பை வேடிக்கை பார்க்கத் துவங்கினர்.

- என் வகுப்பறையில் எல்லா பாடவேளையும் நானே இருப்பதால், அரை நாள் முழுவதும் ஒரு பாடம் என்று திட்டமிட்டு செயல் பட்டு வருகிறேன். அதனால் நேரப்பிரச்சனையைத் தவிர்க்க முடிகிறது.



சி. **தமிழ்ச் செல்வி**, தொ.ப.ஆ, அ.தொ.ப. சின்ன காலாப்பட்டு

Teacher Reflections

# தவளையின் தந்திரம்

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 2, பருவம் 1, பாடம் 4**

**கதை கேட்டு, கதை சொல்லி, படக்கதை வாசித்து பாடத்ததை உணர்ந்தனர்.**

ஆ.மஹேஸ்வரி

**பகுதி -1**

“தவளையின் தந்திரம்” படக்கதையை வாசிக்க வைப்பதற்கான பாடம். இப்பாடத்தை எப்படி நடத்துவது என்று நான் யோசித்த பொழுது பல முறைகள் நினைவிற்கு வந்தது. கதை சொல்லுவோம் என்று யோசித்திருந்தேன். அதன் பிறகு கதை சொல்லவைத்தால் நல்லது என்று எண்ணினேன். கதை சொல்லித் துவங்குவது என்று முடிவு செய்து அதன்படி ஒரு கதையை சொன்னேன். விலங்குகளைத் துன்புறுத்தக்கூடாது என்பதை ராஜா உணரும் கதை அது. குழந்தைகளைக் கதை பற்றிய நிகழ்வுக்குக் கொண்டுவர உதவியாக இருந்தது.

**பகுதி - 2**

ஒரு கரடி பொம்மையை எடுத்துக்கொண்டு வகுப்பறைக்குச்சென்றேன். வட்டமாக அமர்ந்திருந்த குழந்தைகளுக்கு நடுவில் அக்கரடியை வைத்து இது யார் என்றேன். நான் எதிர் பார்த்ததுபோல் “கரடி” என்று சொல்லாமல் “டெடி பியர்” என்றனர். அதை தமிழில் எப்படி அழைக்கலாம் என்று கேட்ட பொழுது “கரடி” என்றனர். ஒவ்வொருத்தரும் கரடி கதை ஒன்று சொல்ல வேண்டும் என்றேன். சிலர் ரொம்ப அழகாக சொன்னார்கள். அதில் ஒன்றை மட்டும் இங்கு எழுதலாம் என எண்ணுகிறேன்.



**"ஒரு ஊரில் ஒரு கரடி இருந்தது. அது தன் நண்பர்களுடன் விளையாடியது. அப்பொழுது அங்கு ஒரு பாம்பு வந்தது. அதைப் பார்த்து கரடி பயந்துவிட்டது. பயந்து வீட்டிற்குள் ஓடி ஒளிந்துகொண்டது.**

**மறுநாள் யானை வந்து கரடியைக் கூப்பிட்டது. “வா விளையாடுவோம் என்றது.” கரடி வர மாட்டேன் என்றது. “ஏன்” என்றது யானை. பாம்பு பயமுறுத்தியது என்றது. உடனே பாம்பை மிதித்துக் கொன்றது யானை. எல்லாரும் சேர்ந்து விளையாடினார்கள்."**

இந்த கதையை அவன் சொல்லிய விதம் அழகாக இருந்தது. மொழி நுட்பங்கள் அழகாக வெளிப்பட்டன. ஆனால் பாம்பைப் பார்த்தால் நம்மை எப்படிப்பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதையும், பாம்பை கொல்வது சரியா? வேறு என்ன செய்யலாம் என்ற உரையாடல் நடத்துவது அவசியம் என்று தோன்றியது. மற்ற மாணவர்களின் கதை கூறும் திறனை தடை செய்ய வேண்டாம் என விட்டு விட்டு பிறகு அதைப் பற்றிப் பேசினேன். )

**பகுதி -3**

பாடப்புத்தகத்தைத் திறந்து தவளையின் தந்திரம், படக்கதையை எடுத்தோம். மாணவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி.

யார் கதை சொல்லப்போகிறீர்கள் என்று கேட்டபொழுது அனைவருமே நான் நான் என்றனர். அதை சமாளிக்க தவளைக்கதையை ஆளுக்கொரு வரி சொல்வோம் என்று முடிவு செய்தோம்.

- தவளை விளையாடிக் கொண்டிருந்தது.

- அதை கொக்கு பார்த்தது.
- கொக்கு வாயிற்குள் தவளை நின்றது.
- தவளையை தண்ணீருக்குள் கொண்டு வந்து போட்டது.

என்று கதையை முடித்துக் கொண்டனர். கதை



நன்றாக இருந்தது. ஆனாலும் நாம் கூற விரும்பும் தவளை கதையை மாணவர்களிடமிருந்து, எதிர் பார்ப்பது அதிகம்தான். அதனால் நானே கதையைக் கூறத்துவங்கினேன்.

அமைதியாகக் கேட்டனர். பார்வையில் படமும், காதில் வார்த்தைகளும் விழுந்தபொழுது அவர்கள் கதையில் சுலபமாக ஆழ்ந்து போனதை உனர முடிந்தது. அதன் பிறகு ஒவ்வொருவராகக் கதையைத் திரும்பக் கூறினர். படத்தில் கை விரலை வைத்து தலையை ஆட்டி கதையை சரியாகச் சொல்லவேண்டும் என்ற முயற்சியுடன் கதை கூறினர்.

கதை முடிந்ததும் கதைத் தொடர்பான கேள்விகள் சில கேட்டேன்.

தவளை என்னசெய்தது? ஏன் வளையத்தை வைத்து விளையாடியது. தவளை எப்படி தப்பித்தது? போன்ற கேள்விகளுக்கு அழகாக பதிலளித்தனர்.

அவர்கள் ஒரு வேளை தவளையால் வளையத்தைத் தூக்கமுடியாதே! என்பது போன்ற கேள்வி கேட்க நேர்ந்தால் கதையில் நாம் நினைப்பதுபோல் செய்து கொள்ளலாம். என யோசித்து வைத்திருந்தேன் ஆனால் தேவைப்படவில்லை.

**பகுதி** - 4

கொக்கும் நண்டும் படக் கதையை நகல் எடுத்து மாணவர்களிடம் கொடுத்து கதை சொல்லச் சொன்ன பொழுது அவர்கள் கொக்கிடமிருந்து தவளை காப்பாத்திக் கொண்டதைக் குறிப்பிட்டனர். ஆனால் படத்தின் மூலம் அவர்கள் விதம் விதமான கதையை மனதிற்குள் உருவாக்குகின்றனர். ஒருவர் குறிப்பிட்டதைக் கேட்ட மாணவர்களால் சுதந்திரமாக இன்னொன்றை உருவாக்க முடியாமலிருந்தது. அதனால் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக கதையைத் தர வேண்டும் என யோசித்தேன்.



கதைக்கு அனைவரும் வண்ணம் தீட்டினர். வண்ணம் தீட்டிய கதையை வீட்டிற்கு எடுத்துச் சென்று கதையை யாருக்கெல்லாம் சொல்ல முடியுமோ அவர்களுக்கெல்லாம் சொல்ல வேண்டும் என கையில் கொடுத்தனுப்பினேன்.

**பகுதி** - 5

பாப்பாவிற்கு கதை சொன்னேன். ஆனால் அது கேட்கவில்லை கொக்கு, கொக்கு என்று சொன்னது.

அம்மாவுக்குக் கதை சொன்னேன் .

நான் 3 பேருக்குக் கதை சொன்னேன். என்பது போன்று கூறினார்கள்.



**ஆ.மஹேஸ்வரி**, தொ.பா.ஆ, அ.தொ.ப. பெரியார் நகர்

# இயற்கை

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 4, பருவம் 1, பாடம் 4**

**நாங்களே பேசுவோம் நாங்களே எழுதுவோம், வருணனைச் சொற்களைக் கலந்து"**

சு.அமலோர்பவ மேரி

**பகுதி -1**

'இயற்கை' பாடத்தின் மூலம் மாணவர்கள் அடைய வேண்டிய திறன்களான படம் பார்த்து வருணித்து எழுதுதல், தங்கு தடையின்றிப் பேசுதல், படத்தொகுப்பு உருவாக்குதல், கதை சொல்லுதல் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு ஏற்ப பாடத்திட்டத்தைத் தயாரித்து மாணவர்களிடம் சென்றேன்.

12 மாணவர்களைக் கொண்டது எனது வகுப்பறை. முதலில் மாணவர்களிடம் 'நில்-அமர்' விளையாட்டை விளையாடி மகிழ்ச்சி அடையச் செய்தேன். பிறகு, மாணவர்களிடம் உரையாட ஆரம்பித்தேன்.

ஆசிரியர்: நீங்கள் காட்டிற்குச் சென்ற அனுபவம் உண்டா?

மாணவன் 1: இல்லை மிஸ்.

மாணவன் 2: போய் இருக்கிறேன் மிஸ்.

மாணவன் 3: சினிமாவில் பார்த்திருக்கிறோம் மிஸ்.

ஆசிரியர்: அங்கு நீங்கள் என்னவெல்லாம் பார்த்து இருக்கிறீர்கள்?

மாணவன் 1: மலை, காடு நிறைய மரம், செடி

மாணவன் 2: அருவி

மாணவன் 3: விலங்கு, பறவை

மாணவன் 4: கல், பாறை, பாம்பு, குரங்கு

ஆசிரியர்: இவையெல்லாம் அங்கு எப்படி வந்தன?

மாணவர்கள்: இயற்கையாக..

ஆசிரியர்: ஆம். இவை அனைத்தும் நமக்கு இயற்கை அளித்த பரிசு. இன்று 'இயற்கை' பாடத்தைப் படிப்போம் எனக் கூறி பாடத்திற்குள் சென்றோம். மேலும், செயற்கை பொருள்கள் பற்றியும் அவை மனிதனால் உருவாக்கப்படும் விதம் பற்றியும் கூறினேன். (எ.கா.) வளையல், புத்தகம், பென்சில்...

அடுத்ததாக, வகுப்பில் உள்ள மாணவர்கள் அனைவருக்கும் தனித்தனியாக விலங்குகளின் படம் ஒன்றைக் கொடுத்தேன். மாணவர்கள் அப்படத்தைப் பார்த்து, தனக்குத் தோன்றும் எண்ணங்களை வருணனையாக வாக்கியத்தில் கூறச் செய்தேன். மாணவர்களிடமிருந்து வந்த பதில்களில் சில எனக்கு வியப்பை ஊட்டின. சில வருணனைகள் புதுமையாக இருந்தது.

மாணவர்கள் வருணித்துக் கூறிய விதத்தைக் கீழே எழுதியுள்ளேன்.

ஒரு மாணவி, "நரி சத்தமாக ஊளையிடும்", என்று கூறி ஊளையிட்டுக் காண்பித்தாள். மற்றவர்கள்,

"கரடி கருமையாக இருக்கும்"

"ஒட்டகச் சிவிங்கியின் கழுத்து நீளமாக இருக்கிறது"

"வரிக்குதிரையின் கோடுகள் வளைவாக உள்ளன"

மேலும், "சிங்கம் கோபமாக இருக்கிறது" "நரி

தந்திரமான விலங்கு" போன்ற எண்ணங்கள் எனக்குப் புதுமையாகவும் வியப்பாகவும் இருந்தது.

மாணவர்களின் பதில்கள் சிறப்பாகவும் புதுமையாகவும் இருந்தன. அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் நான், நீ என முந்திக்கொண்டு பதில் கூறியது எனக்கு மகிழ்ச்சியை அளித்தது.



பின்பு அவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்தேன். ஒவ்வொரு குழுவுக்கும் வண்ணக் காகிதம், கத்திரிக்கோல், பசை போன்றவற்றைக் கொடுத்தேன். அவைகளைக் கொண்டு பொருள், பறவை, விலங்கு, மரம் போன்ற ஏதேனும் ஒன்றைச் செய்து, அதைக் காகிதத்தில் ஒட்டி, பின் அதை வருணித்து வாக்கியம் ஒன்று எழுத வேண்டும் என்று கூறினேன். மேலும், இச்செயல்பாட்டில் அனைத்து மாணவர்களும் பங்கேற்க வேண்டும் என்றும் எந்தக் குழு முதலில் செய்து முடிக்கின்றதோ அக்குழுவே வெற்றி பெற்றதாகும் என்றும் கூறினேன்.

இச்செயல்பாட்டில் மாணவர்கள் ஆர்வமுடனும் விருவிருப்பாகவும் செயல்பட்டனர். வீடு, கப்பல், மயில், பறவை, பூக்கள் என அழகழகாகச் செய்து ஒட்டியிருந்தனர். வருணித்து எழுதியதில் பிழைகள் இருந்தன. ஆனால் அவர்களைக் கூறச் சொல்லி கேட்டபோது சரியாகவே கூறினர். ஒரு பொருளை வருணித்துக் கூறுவதில் மாணவர்களுக்கு எந்தச் சிரமமும் இல்லை; ஆனால் அதையே எழுதும் போது சில மாணவர்களுக்கு வாக்கியத்தில் அமைத்து எழுதத் தெரியவில்லை.

மாணவர்களின் ஆர்வமும் உற்சாகமும் இச்செயல்பாட்டின் வெற்றி. வாக்கியத்தில் கூறத் தெரியும் ஆனால் எழுதத் தெரியவில்லை என்பதே தோல்வி

இதைத் தொடர்ந்து, மாணவர்கள் ஓடியாடிக் கற்க அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் ஒரு விளையாட்டை விளையாடினோம். மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்தேன். ஒரு குழுவுக்கு வட்டமான, பச்சை, அழகான, உயரமான போன்ற ஏதேனும் ஒரு வருணனைச் சொல்லைக் கொண்ட அட்டைகளைக் கொடுத்தேன். மற்றொரு குழுவுக்கு நிலா, சட்டை, மயில், மரம் போன்ற பெயர்ச்சொல் அட்டைகளைக் கொடுத்தேன்.

மாணவர்களுக்கு விளையாட்டின் விதிமுறைகளை விளக்கினேன். அனைவரும் விளையாடத் தயாரானோம். நான் கைதட்டிய உடன், பெயர்ச்சொல் அட்டையை வைத்திருக்கும்



மாணவன் ஓடிச் சென்று அப்பெயருக்கு ஏற்ற வருணனைச் சொல் அட்டை வைத்திருக்கும் மாணவனுடன் சேர்ந்து நிற்க வேண்டும் (உ.ம்.)

மாணவர்களின் ஆர்வமும் உற்சாகமும் இச்செயல்பாட்டின் வெற்றி. வாக்கியத்தில் கூறத் தெரியும் ஆனால் எழுதத் தெரியவில்லை என்பதே தோல்வி

நான் வடிவமைக்கும் செயல்பாடுகள், விளையாட்டுகள், பயிற்சிகள் போன்றவைகளில் மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் பங்கேற்பதோடு கற்றலும் நிகழவேண்டும்




'வட்டமான நிலா'. விரைவாகக் கண்டுபிடித்து வாசித்துக் காட்டிய மாணவர்களைக் கைதட்டி உற்சாகப் படுத்தினோம். வாசிக்க சற்று நேரம் எடுத்த மாணவர்களுக்கு வாசிக்க உதவினோம்.

மேற்கூறிய செயல்பாடுகளின் வாயிலாக மாணவர்களுக்கு வருணனைச் சொற்களைப் பற்றிய ஒரு அறிமுகம் கிடைத்தது என்றே கருதுகிறேன். அடுத்தாகப் பாடப்புத்தகத்திலுள்ள படங்களை வருணித்துக் கூறவும் எழுதவும் பயிற்சிகள் அளிக்க வேண்டும். வருணனைச் சொற்கள் எவ்வாறு வாழ்வில் ஒரு அங்கமாக இருக்கின்றன என்பதையும் மாணவர்கள் அறிய வேண்டும். மேலும் தங்குதையின்றி பேசுதல், கதை சொல்லுதல், கதையை ஒரு படத்தொகுப்பாக உருவாக்குதல் போன்ற திறன்களை மாணவர்களுக்கு வளர்க்க வேண்டும். இவை அனைத்தையும் விட, நான் வடிவமைக்கும் செயல்பாடுகள், விளையாட்டுகள், பயிற்சிகள் போன்றவைகளில் மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் பங்கேற்பதோடு கற்றலும் நிகழவேண்டும் என்ற எண்ணங்களோடு இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.



**சு. அமலோர்பவ மேரி,** தொ.பா.ஆ, அ.தொ.ப. மடுகரைபெட்

# இயற்கை

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 4, பருவம் 1, பாடம் 2**

**“பெயர், வினை, வருணனை - புரிந்து கொள்ள இனி இல்லை கவலை”**

மு. சாந்தகுமாரி,

நான்காம் வகுப்பு மாணவர்களுக்கு வருணனைச் சொற்களை அறிமுகம் செய்வதற்காக ‘இயற்கை’ என்னும் பாடத்தின் செயல்பாடுகளை வடிவமைத்தேன். அச்செயல்பாடுகளை வகுப்பறையில் செய்யும்போது எனக்குக் கிடைத்த அனுபவங்களையும் நான் கற்ற பாடங்களையும் இக்கட்டுரையில் எழுதியுள்ளேன்.

செயல்பாடு 1: நான் யார்? கண்டுபிடி!

முதல் செயல்பாடாக, நான் மேசையின் மீது சீப்பு, பொம்மைகள், கண்ணாடி, காய்கறிகள் போன்ற சில பொருட்களை வைத்து அவற்றை ஒரு துணியால் மூடினேன். ஒவ்வொரு மாணவராக வந்து ஏதேனும் ஒரு பொருளை எடுத்து அது எவ்வாறு இருக்கிறது என்று கூற வேண்டும். மற்ற மாணவர்கள் அந்தப் பொருளை ஊகிக்க வேண்டும். **ஒரு மாணவன் தக்காளியை விவரிக்கும் போது மாணவர்களுக்கு வட்டத்திற்கும் உருண்டைக்கும் வேறுபாடு தெரியவில்லை என்பதை நான் அறிந்தேன்.** பிறகு நாங்கள் அதைப்பற்றி வகுப்பறையில் விவாதித்தோம். மாணவர்களுக்குப் பல உதாரணங்களைக் காட்டினேன். வகுப்பில் இருந்த அனைத்து மாணவர்களும் இச்செயலின் ஈடுபட்டனர். அதனால் ஒவ்வொரு மாணவரின் ‘விவரித்துக் கூறும் திறனை’ என்னால் மதிப்பிட முடிந்தது.

மாணவர்கள் பொருட்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்திய அனைத்து வார்த்தைகளையும் கரும்பலகையில் எழுதினேன். மொத்தமாக முப்பத்தைந்து வருணனைச் சொற்கள் கிடைத்தன. அவற்றைக் கொண்டு ‘வருணனைச் சொற்கள்’ என்ற வார்த்தையை அறிமுகம் செய்தேன். ஏன் அவ்வாறு அழைக்கிறோம் என்றும் கூறினேன். உதாரணமாக, ஒரே பெயரில் இரண்டு மாணவர்கள் இருந்தால், அவர்களில் ஒருவரைக் குறிப்பிட ‘உயரமாக இருப்பான், சுருட்டை முடி கொண்டிருப்பான், கால்பந்து நன்றாக விளையாடுவான்’ என்று கூறி அவனைப் பற்றிய விளக்கங்களை அளிப்போம். மாணவர்கள் கரும்பலகையில் இருந்த சொற்களை எழுதிக்கொண்டனர்.

செயல்பாடு 2: பொம்மையை விவரிக்கலாம்

மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்.



ஒவ்வொரு குழுவிலிருந்து ஒருவர் வந்து தனக்குப் பிடித்த ஒரு பொம்மையை எடுத்துச் சென்றனர். அவரவர் தேர்ந்தெடுத்த பொருளைப் பற்றி 5 வரிகள் விவரித்து எழுதினர். குழுக்கள் தாங்கள் எழுதியதை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டனர். அனைத்து குழுவும் அழகு, வண்ணம், பெரிய, சிறிய போன்ற வார்த்தைகளையே அதிகமாகப்

பயன்படுத்தியிருந்தனர்.

**நான் எதிர்பார்த்த விளைவு கிடைக்கவில்லை. நாங்கள் வகுப்பறையில் பயன்படுத்திய வார்த்தைகளை மட்டுமே மாணவர்கள் உள்வாங்கி இருக்கின்றனர். வருணனைச் சொற்களைப் பற்றிய புரிதல் இன்னும் சரியாக வரவில்லை என்பது எனது கணிப்பு.** அதனால் மேலும் சில செயல்பாடுகளைச் செய்ய ஆயத்தமானேன்.

செயல்பாடு 3: கதை கேட்போம், வரைவோம்

நான் கதை ஒன்றைக் கூறினேன். கண் தெரியாத, காது கேட்காத, வாய் பேச முடியாத மூன்று நண்பர்கள் பற்றிய கதை. கண் தெரியாதவர் தொட்டுப்பார்த்த ஒரு விலங்கைப் பற்றித் தன் நண்பர்களுக்குக் கூறுகிறார். காது கேட்காதவருக்காக வாய் பேச முடியாதவர் வரைந்து காட்டுகிறார். நான் ஒவ்வொன்றாகக் கூறக் கூற மாணவர்கள் அனைவரும் தனது நோட்டுப் புத்தகத்தில் வரைந்தனர்.

- பானை வயிறு
- முறம் போன்ற காது
- பூசணிக்காய் தலை
- சிறிய கண்கள்
- தூண் போன்ற 4 கால்கள்
- குட்டையான, மெல்லிய வால்
- வளைந்த, ஆடக்கூடிய தூண் போன்ற கால், முகத்தில் இருக்கும்

என்றதும் அவர்கள் வரைந்து முடித்தனர். அனைவரின் படமும் ஏறக்குறைய ஒன்றாகவே இருந்தது. அனைவரும் ஒன்றாக 'யானை' என்று கத்தியது மகிழ்ச்சியாக இருந்தது.

இச்செயல்பாட்டில் நான் யானை என்ற வார்த்தையை முதலிலேயே கூறிவிட்டேன். அதனால் அவர்கள் யானையின் உருவத்தை மனதில் கொண்டு வரைந்தனர். **ஏதோ ஒரு விலங்கு என்று கூறியிருந்தால் விளையாட்டு இன்னும் சுவரசியமாக இருந்திருக்கும்.** ஆனாலும் அவர்கள் பானை வயிறு என்றதும் 'ஒரு பானையை' வரைந்ததை, இன்று நினைத்தாலும் எங்களுக்குச் சிரிப்பு வரும்.

செயல்பாடு 4: கனவில் வந்த விலங்கு

இதுவும் வரையும் விளையாட்டுதான். நேற்று நான் ஒரு கனவு கண்டேன். அதில் ஒரு விலங்கைப் பார்த்தேன். அதை இப்போது வரையப் போகிறோம் என்று கூறி ஒவ்வொரு வரியாகக் கூறினேன்.

- சிறிய தலை
- நீளமான உடம்பு
- 2 சிறிய முன்னங்கால்கள்
- 2 பெரிய பின்னங்கால்கள்
- முன்னங்காலில் இருந்து பின்னங்காலை இணைக்கும் விரிந்த பெரிய இறக்கைகள்
- பெரிய முட்களை உடைய கூரான குட்டையான வால்
- நீண்ட அகலமான தடித்த அலகு

மாணவர்களுக்கு ஒரு சந்தேகம். **இறக்கை என்றதால் அது ஒரு பறவையாக இருக்க வேண்டும் என்பது அவர்களது ஊகம். பறவைக்கு முன்னங்கால்களா என்பது அவர்களது சந்தேகம்.** பிறகு நான் "ஏன் விலங்காக இருக்கக் கூடாது?" என்று கேட்டேன். அதன் பின் வேகமாக வரைந்து முடித்தனர். இறுதியாக, நான் என் படத்தைக் காட்டினேன். அனைவரும் 'ஓ' என்று கத்தினர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வரைந்திருந்தனர். தெரியாத விலங்கு என்பதால், விளையாட்டு மிகவும் விருவிருப்பாக இருந்தது. ஒருவர் படத்தை மற்றவர் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தனர்.

மேற்கூறிய இரண்டு செயல்பாடுகளிலும்

நான் அதிகமாக வருணனைச் சொற்களைப் பயன்படுத்தினேன். விலங்குகளின் ஒவ்வொரு உறுப்பைப் பற்றி கூறும் போதும் வருணனைச் சொற்களின் பயன்பாடு அதிகமாகவே இருக்குமாறு உறுதி செய்து கொண்டேன். இவ்விரு செயல்பாடுகளும் வருணனைச் சொற்களை அறிவதில் மாணவர்களுக்குப் பெரும் உதவியாக இருந்தன.

செயல்பாடு 5: மயில் போல் ஆடுவோம்

மயிலின் தோகையைக் கட்டிக் கொண்டு, அதை வருணித்துப் பாடல் ஒன்றைப் பாடினேன். ஆடிக்கொண்டே பாடியதால், மாணவர்களும் என்னுடன் ஆடத் தொடங்கிவிட்டனர். பாடலை இரண்டு மூன்று முறை பாடச் சொல்லி கேட்டனர். என்னுடன் சேர்ந்து ஆடியதால் எங்களுக்குள் நெருக்கம் இன்னும் கூடியது. என்ன பாடல் அது? நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டாமா?

அழகு மயில் நான் வந்தேனே,
உன்னைப் பார்க்க வந்தேனே,
வண்ண மயில் நான் வந்தேனே,
பாங்காய் பறந்து வந்தேனே.
நீல கழுத்து எனக்கிருக்கு,
நீண்ட தோகை பின்னிருக்கு.
கரிய மேகம் பார்த்தவுடன்,
வண்ணத் தோகை விரித்து உடன்,
ஒயிலாய் நடனம் ஆடிடுவேன்,
சுற்றிச் சுற்றி ஓடிடுவேன்.
சிரிக்கும் சிறுவர் உம்முடனே,
சிறப்பாய் நானும் ஆடிடுவேன்.

செயல்பாடு 6: வருணனை கலந்து பேசுதல்

வண்ணத்துப் பூச்சியின் இறகு போன்ற அமைப்பை ஒரு மாணவியின் முதுகிலும் சூரியகாந்திப் பூவின் இதழ் போன்ற அமைப்பை ஒரு மாணவனின் தலையிலும் கட்டி அவர்கள் இருவரையும் தன்னைப் பற்றி தானே (role play) கூறும் படிச் செய்தேன்.

இதிலும் நான் எதிர்பார்த்த அளவு வருணனைச் சொற்கள் வெளிப்படவில்லை. "இறகைத் தொட்டால் எப்படி இருக்கும்?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் "மெத்து மெத்துன்னு இருக்கும், soft-ஆக இருக்கும்" என்றனர். அதற்கு 'மென்மையாக இருக்கும்' என்று கூறுகிறீர்களா என்றேன். ஆம் என்றனர். அதற்கு எதிர்ச்சொல்லைக் கேட்டபோது 'கல் மாதிரி' என்றனர். எனவே 'கடினமான' என்ற சொல்லை அறிமுகப் படுத்தத் தேங்காய் ஓட்டை உதாரணமாகக் கூறினேன்.
என் மாணவர்களிடமிருந்து இன்னும் அதிகம் எதிர்பார்க்கிறேன். எனக்கு திருப்தி ஏற்படவில்லை. எப்படியாவது ஒவ்வொரு மாணவனும் 'வருணனைச் சொல்லைப்' புரிந்து பயன்படுத்த வேண்டும். எனக்குள் பல கேள்விகள் எழுந்தன. **அனைவருக்கும் ஏன் புரியவில்லை? அவர்கள் இயல்பாக பேசும்போது பயன்படுத்துகிறார்கள். ஆனால் வகுப்பறையில் கேட்கும் போது ஒருசில வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்துகின்றனர். ஒருவேளை 'பெயர்ச்சொல்' புரிதலில் சிக்கல் இருக்கிறதோ? அல்லது வாக்கிய அமைப்பே தெரியவில்லையோ?**

செயல்பாடு 7: பெயர், வினை, வருணனை

மாணவர்களிடமிருந்து பெயர்ச்சொற்களை வரவழைத்தேன்; வினைச்சொற்களையும் வாங்கினேன். (மாணவர்களுக்கு 'வினைச்சொல்' என்பது தெரியவில்லை; ஆனால் 'Action words'

தெரிந்திருக்கிறது. இது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்). தனித்தனியாக கரும்பலகையில் எழுதினேன். வகுப்பறையில் இருக்கும் பொருட்களின் பெயரைக் கூறி அவற்றை எடுத்து வரச் சொன்னேன். வினைச் சொற்களை அவற்றுடன் கலந்தேன். **மாணவர்கள் "படி என்ற சொல்லை எடுத்து வர முடியாது மிஸ். செய்து காட்டத்தான் முடியும்" என்றனர். எனக்கு மகிழ்ச்சி. மாணவர்களுக்கு பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் வித்தியாசம் தெரிகிறது.** பெயர்ச்சொல்லைக் கொண்டு வருணனைச் சொற்களை எளிமையாக கற்பிக்கலாம் என்ற எண்ணம் தோன்றியது.

செயல்பாடு 8: வாசித்து வகையறிவோம்

அடுத்தநாள் ஒரு பயிற்சித்தாளுடன் வகுப்பறைக்குச் சென்றேன். அனைவருக்கும் வழங்கினேன். அதில் ஒரு கதை இருந்தது. வருணனைச் சொற்கள் நிறைந்திருந்தன. அவைகள் தடித்த எழுத்துக்களில் (bold) இருந்தன. பெயர்ச்சொற்களைச் சார்ந்து வருணனைச் சொற்கள் இருப்பதை மாணவர்கள் உற்றுநோக்கினர். அவர்களுக்கு புரிதல் வரத் தொடங்கியதைக் கவனித்தேன்.

செயல்பாடு 9: விளையாடலாம் வாங்க!



அழகிய முயலும் அறிவான கேரட்டும்

ஓர் **அடர்ந்த** காடு. அங்கு நெடிய மரங்கள். **ஓங்கி வளர்ந்த** மரங்கள் காட்டை மேலும் அழகூட்டின. **பலத்த ஓசையுடன்** அருவி கொட்டுகிறது. ஆற்றில் **சலசலவென்று** நீர் கரைபுரண்டு ஓடுகிறது. எங்கு திரும்பினாலும் **பச்சைப் பசேல் எனச்** செடிகள், புதர்கள், புல்வெளிகள். இந்த **அழகான** சூழலில் **தூய வெண்மை** நிறத்தில் பட்டு போன்ற **மென்மையான** உடலுடன் குட்டி முயல் ஒன்று **அடர்ந்த** புதர் ஒன்றில் வசித்து வந்தது. அதற்குத் தான் மிகவும் குட்டியாக இருக்கிறோம் என்ற **தாழ்வு** மனப்பான்மை இருந்தது.

ஒரு நாள் அது காட்டில் விளையாடிக் கொண்டிருந்தது. அப்போது **வண்ணத்** தோகையுடைய மயிலைப் பார்த்தது. **நீண்ட** தூண்கள் போன்ற கால்களை உடைய **பெரிய** யானையைப் பார்த்தது. தான் இவர்களைப் போல் பெரியதாக இல்லையே என்று மிகவும் கவலைப் பட்டது. **சிறிது** தூரம் சோகத்துடன் நடந்து சென்றது. அப்போது அதற்கு **மிகுந்த** பசி எடுத்தது. **சற்று** தூரத்தில் **பசுமையான** கேரட் தோட்டம் ஒன்று முயலின் **கூர்மையான** பார்வையில் பட்டது. **கண்ணைப் பறிக்கும்** கேரட்டுகள் **ஆரஞ்சு** நிறத்தில் மண்ணில் இருந்து எட்டிப் பார்த்தன. ஓடிச்சென்று தன் **கூறிய** பற்களால் மண்ணைத் தோண்டியது. **குட்டிக்** கைகளால் கேரட்டைப் பிடித்துச் சாப்பிட முயன்றது.

அப்போது அந்த **பிஞ்சு** கேரட், **வெள்ளை** முயலைப் பார்த்து, "குட்டி முயலே, ஏன் சோகமாக இருக்கிறாய்?" என்றது. முயல், "**வண்ண** மயில், **பருத்த** யானை போன்று நானும் உயரமாக இல்லையே என்று அழுகையாக வருகிறது" என்றது.

உடனே **சின்ன** கேரட், "கவலைப் படாதே **பட்டு** முயலே! **பச்சைக்** காய்கறிகளையும் **கனிந்த** பழங்களையும் சாப்பிட்டால் நீயும் உயரமாக வளர்ந்து விடுவாய்" என்று **அன்பாய்** அறிவுரை கூறியது. அதைக் கேட்ட **அழகு** முயல் மகிழ்ச்சியால் **துள்ளிக் குதித்து** ஆடியது.

விளையாட்டு மைதானத்திற்குச் சென்று, மாணவர்களை வட்டமாக நிற்க வைத்தேன். நடுவில் நான் நின்று கொண்டு ஏதேனும் ஒரு வருணனைச் சொல்லைக் கூறிக் கொண்டே, வளைபந்தை (ring ball) யாரேனும் ஒருவரிடம் வீசினேன். பந்தைப் பிடித்த மாணவன் அதற்கேற்ற பெயர்ச்சொல்லைக் கூறி என்னிடம் திரும்ப வீசினான். உதாரணமாக, நான் 'வளைந்த' என்று கூறினால் அவன் 'வளைந்த கம்பி/ பாதை/ பகுதி என்று ஏதேனும் ஒன்றைக் கூற வேண்டும். அனைவரும் முடித்த பிறகு இதே விளையாட்டை வேறுவகையாக விளையாடினோம். இந்தமுறை நான் பெயர்ச்சொல் ஒன்றைக் கூறுவேன்; மாணவர்கள் வருணனைச் சொல்லோடு சேர்த்துக் கூற வேண்டும்.



**விளையாடும் போது மாணவர்கள் விருப்பத்துடன் கற்கின்றனர். கற்றலும் இயற்கையாக இயல்பாக இருந்தது. ஒரு சிலர் தவறாகச் சொன்ன போது மற்ற மாணவர்கள் அவர்களுக்கு உதவிய விதம் அருமை.** இவர்களின் கற்றலை வலுவூட்ட மேலும் ஒரு விளையாட்டை விளையாடினோம்.

செயல்பாடு 10: வருணனைச் சொல் கொண்டு உயிர் கொடுப்போம்!

வருணனைச் சொற்களை மின்னட்டையில் எழுதிக் கொண்டேன். ஒரு அட்டையை பொருத்துப் பலகையில் ஒட்டிவைத்தேன். அனைவரும் அதைப் படித்தனர். ஒருவர் மற்றவர்களைத் துரத்திப் பிடிக்கும் போது அவர் அமர்ந்து கொள்வார். அவருக்கு



உயிர் கொடுக்க விரும்புவோர் பலகையில் உள்ள சொல்லுக்கேற்ற பெயர்ச்சொல்லைக் கூறி உயிர்கொடுக்க வேண்டும். இது போல் எத்தனை பெயர்ச்சொல்லை வேண்டுமானாலும் இணைத்துக் கொள்ளலாம். உதாரணமாக, 'வாடிய' என்ற சொல்லுக்கு 'வாடிய பூ, வாடிய செடி, வாடிய காய், வாடிய முகம்' என்று கூறிக்கொண்டே போகலாம். ஒரு சொல் முடிந்தவுடன் அடுத்த சொல்லை மாற்ற வேண்டும். அடுத்த நிலையாகப் பெயர்ச்சொல்லைக் கொடுத்து வருணனைச் சொற்களை வரவழைத்தேன்.

'சிவந்த' என்ற சொல்லுக்கு மிளகாய், குங்குமம், உடை, வளையல், நிறம் என்று பல பெயர்ச்சொற்கள் கிடைத்தன. அதில் ஒரு மாணவன் சிவந்த மஞ் சள் என்றான். மஞ்சளில் இருந்து தான் குங்குமம் செய்யப்படுகிறது என்பது அவனுக்கு எப்படித் தெரியும் என்று எனக்கு ஒரு ஐயம். அவனைக் கேட்ட போது, **"மஞ்சள் கிழங்கைத் தோண்டும் போது அது லேசான சிவப்பு நிறத்தில் இருக்கும். காய்ந்த பிறகு தான் மஞ்சளாக மாறும்" என்றான். குழந்தைகளின் வாழ்வியல் அறிவை எண்ணி எண்ணி வியந்தேன். இனி என் வகுப்பறையில் அவ்வகையான அறிவுக் களஞ் சியத்திற்கு முன்பைவிட அதிக இடம் நிச்சயம் உண்டு.**

பிறகு அவர்களை இருகுழுக்களாகப் பிரித்து ஒரு குழுவினரை அடுத்த குழுவினர் பார்க்க முடியாத வண்ணம் நிற்க வைத்தேன். ஒரு குழுவிடம் வருணனைச் சொற்களையும் மற்றொரு குழுவிடம்



பெயர்ச்சொற்களையும் கொடுத்தேன். நான் 'start' என்று கூறியவுடன் அவர்கள் ஓடிச் என்று தனது இணையுடன் நிற்க வேண்டும். இதில் ஒரு இணை மட்டும் சரியாக நிற்கவில்லை. அதாவது பெரிய மரம் என்பதற்கு பதில் மரம் பெரிய என்று நின்றிருந்தனர். நான் ஒவ்வொரு இணையாகப் படித்துக் கொண்டு வரும் போது அவர்களும் இடம்மாறி நின்று சரிசெய்து கொண்டனர்.



**வகுப்பறையில் அவர்களை அமரவைத்துப் புத்தகத்தைக் கையில் பிடித்துக் கொண்டு நான் மட்டுமே பேசி மாணவர்கள் கேட்டிருந்தால் இத்தகைய கற்றல் எனக்குக் கிடைத்திருக்காது என்பது உண்மை.**

<u>செயல்பாடு 11: பொருத்துதல்</u>

விளையாட்டு மைதானத்தில் விளையாடிய பின் அந்த மின்னட்டைகளைக் கலந்து மாணவர்களிடம் கொடுத்தேன். ஒவ்வொரு குழுவும் ஒரு சார்ட் தாளில் பெயர்ச்சொற்களை அவற்றிற்கேற்ற வருணனைச் சொற்களோடு பொருத்தி ஒட்டினர். இது மாணவர்கள் பாடநோக்கத்தை அடைந்தனர் என்பதை எனக்கு உறுதிபடுத்தியது




செயல்பாடு 12: பயிற்சித்தாள் வழி சுயமதிப்பீடு

மாணவர்களின் புரிதலையும் எனது கற்பித்தலையும் மதிப்பிட ஒவ்வொருவருக்கும் ஒரு பயிற்சித்தாளைக் கொடுத்தேன். அதில் இருந்த கதையை வாசித்து, அதிலுள்ள வருணனைச் சொற்களை எடுத்து எழுதி, அவற்றைப் பயன்படுத்தி இரண்டிரண்டு வாக்கியங்களை எழுதினர்.

**எனது கற்றல்:**

பாடப்பகுதியைப் பார்த்தவுடன் **மிக எளிமையான பாடம். நான்கு பாடவேளைகளில் முடித்துவிடலாம் என்று நினைத்தேன்.** அது தவறு என்று பிறகு தான் தெரிந்தது. முதல் செயல்பாட்டிலேயே ஏன் எதற்கு என்ற கேள்விகளை மாணவர்களிடம் கேட்டிருந்தால் அவர்களுக்குப் பெயர்ச்சொல் மற்றும் வினைச்சொல் ஆகியவற்றில் தெளிவில்லை என்பது எனக்குத் தெரிந்திருக்கும். **மாணவர்களின் முன்னறிவை ஆசிரியர்கள் தெரிந்து கொண்டு கற்பிக்கத் தொடங்குவது ஏன் அவசியம் என்பதை உணர்ந்தேன்.**

எனது மாணவர்களிடமிருந்து நித்தம் நான் கற்பதால் எனது பணியில் ஒருபோது சலிப்பு ஏற்படுவதில்லை. அடுத்த வகுப்பில் மாணவர்கள் எனக்கு என்ன கற்றுத்தரப் போகிறார்கள் என்ற ஆர்வத்துடன் காத்துக் கொண்டிருக்கிறேன்.



பயிற்சித்தாள்- வகுப்பு 4

கதையில் உள்ள வருணனைச் சொற்களைக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எடுத்து எழுதவும். ஒவ்வொரு வார்த்தையைப் பயன்படுத்தி இரண்டு வாக்கியங்களை எழுதவும்.

அழகிய செழிப்பான ஒரு புல்வெளியில் குட்டி ஆடுகள் பல மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றை முகிலன் என்ற சிறிய பையன் மேய்த்துக்கொண்டு வந்தான். பிறகு ஒரு பெரிய மரத்தின் அடியில் உட்கார்ந்தான்.

மரத்தின் மேல் சாய்ந்த பொழுது சொரசொரப்பாகவும் கடினமாகவும் இருப்பதை உணர்ந்தான். அதனால் தனது வெள்ளைத் துண்டைத் தலைக்கு வைத்துச் சாய்ந்தான். மெல்லிய தென்றல் அவனைத் தழுவிச் சென்றது. பல வண்ண மலர்கள் புல்வெளியில் கொட்டிக் கிடந்தன. மலர்களால் அந்த இடமே மணமாக இருந்தது. முகிலன் கண்களை மூடிக்கொண்டு தனது நீண்ட புல்லாங்குழலை இனிமையாக வாசித்துக் கொண்டிருந்தான்.

புல்வெளியைச் சுற்றிக் கூர்மையான முட்களைக் கொண்ட வேலி போடப்பட்டிருந்தது. அடர்ந்த உரோமங்களைக் கொண்ட அந்த ஆட்டுக்குட்டிகள், பசுமையான தவிரான புல்லை மேய்ந்து கொண்டிருந்தன. மென்மையான அந்தப் புல்வெளிக்கு அருகில் ஒரு மெல்லிய ஓடை ஓடியது. குட்டி ஆடுகள் அந்த ஓடைக்குச் சென்று குளிர்ந்த நீரைக் குடித்தன.

பிரகாசமான சூரிய ஒளியால் ஓடை நீர் மஞ்சள் நிறத்தில் மின்னியது. பக்கத்தில் இருந்த உயர்ந்த மலையும் நீரில் தெரிந்தது. ஆடுகள் மிகவும் மகிழ்ச்சியாக விளையாடின. தனது ஆடுகள் புல்வெளியில் இல்லாததால் முகிலன் உரத்த குரலில் கூப்பிட்டான். அக்குரலைக் கேட்டு ஆடுகள் வேகமாக ஓடி வந்தன. அனைவரும் ஒன்றாக ஆடிப் பாடிக் கொண்டே வீடு திரும்பினர்.




**மு.சாந்த குமாரி**, தொ.ப.ஆ, அ.தொ.ப. முருங்கப்பாக்கம்

# விண்ணப்பம் எழுதுவோம்

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 4, பருவம் 1, பாடம் 5**

**கதையும் கடிதமும் கற்றலில் விண்ணப்பமாக மாறியது.**

நல்.கருணாநிதி
வா.வீரப்பன்

இப்பாடத்தைப் பொறுத்தவரை குழந்தைகள் விடுமுறை விண்ணப்பம் எழுத வேண்டும். கடிதம் எழுதுதல் அதன் பகுதியாக இருக்கலாம் என்று யோசித்துத் திட்டமிட்டோம். விண்ணப்பம் எப்படி இருக்கவேண்டும் என்ற "அமைப்பு' பாடத்தின் முக்கிய அம்சமாகவும் இருந்தது. விண்ணப்பத்தின் கூறுகளை, கதையின் கூறுகளோடு இணைத்துக் கற்பித்தால் சிறப்பாக இருக்கும் என்றெண்ணி அக்கதையை எழுதினோம். அனுபவத்தை இணைக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு கடிதங்களை சேகரித்து எடுத்துக் கொண்டோம். கடிதப் பயிற்சிக்காக தபால் அட்டை வாங்கி வைத்துக் கொண்டோம்.

**செயல்பாடு** 1

சுப்பிரமணி தாத்தா என்ற கதையை தனித்தனி வரியாக வெட்டி, கலந்து அதை மாணவர்களிடம் கொடுத்து அவற்றை ஒரு கதை வடிவத்தில் வரிசைப் படுத்த வேண்டும்.நான்கு பேர் குழுவில் இதை செய்யச் சொன்னோம். வரிசைப்படுத்தியதை மாணவர்கள் ஒரு பேப்பரில் வரிசையாக ஒட்ட வேண்டும். மாணவர்கள் இவ்வேலையை மகிழ்ச்சியாக செய்து முடித்தனர். முடித்தவுடன் அவர்களே சேர்ந்து வாசித்தனர். பின் வருமாறு உரையாடத்துவங்கினோம்.


கதைத் தாத்தா

ஒரு ஊரில் ஒரு தாத்தா இருந்தார்.

அவர் பெயர் சுப்ரமணி.

சுப்பிரமணி தாத்தா தினமும் கதை சொல்வார்.

குட்டிப் பசங்கள் பல பேர் அவரை சுத்தி சுத்தி வருவார்கள்.

சுப்பிரமணி தாத்தாவுக்கு 100 கதைகள் தெரியும்.

தலையை ஆட்டி , கைகளை உயர்த்தி கதை சொல்வார்.

அதனால் அவருக்கு கதைத் தாத்தா என்று பெயர்.

முதலில் எதை ஒட்டியிருக்கிறீர்கள்?

தலைப்பு (சுப்பிரமணி தாத்தா)

அதை எப்படி தலைப்பு என்று கண்டுபிடித்தீர்கள்? அது ஏன் முதலில் வர வேண்டும்.





ஏனென்றால் - எல்லாத்துக்குமே தலைப்பு இருக்கிறது. அது இப்படிதான் இருக்கும்.

- பெரிய எழுத்துல எழுதியிருக்கும். வாக்கியமா இல்லாம இருக்கும். அதுதான் நடுவுல இருக்கும். அதபத்திதான் உள்ள இருக்கும். என்பது போன்ற பதில்களைக்கூறினர்.

- அடுத்தது என்ன என்று கேட்டபொழுது, “ஒரு ஊருல ஒரு தாத்தா இருந்தாரு,” என்றனர். அது கதைப் பகுதி. அடுத்தது...

இப்படி உரையாடல் மூலம் குழந்தைகள் வடிவத்தை உள்வாங்கியதோடு அழகாக வெளிப்படுத்தினர். இதைத் தொடர்ந்து. எதெதற்கெல்லாம் தலைப்பு, ஆரம்பம், முடிவு உண்டு என்று உரையாடினோம். அதற்கு சில தலைப்புகள் கொடுத்தேன்.

“பள்ளியின் ஒரு நாள் நிகழ்வு” என்ற தலைப்பில் பேசினோம். “காலை 9 மணிக்கு பள்ளி துவங்கும். காலை வழிபாடு நடக்கும்ஞ்.4.15 மணிக்கு முடிவடையும். அப்பொழுது நாங்கள் வீட்டிற்குப் போவோம். இது போன்ற வெவ்வேறு தலைப்புகளில் உரையாடினோம்.” திருமணம், பிறந்தநாள் ஞ்” போன்ற நிகழ்வுகளைப் பற்றிப் பேசி பின் அதிலிருந்து அழைப்பிதழ் மற்றும் விடுமுறை விண்ணப்பம் பற்றி உரையாடினோம்.

**செயல்பாடு - 2**

இச்செயல்பாட்டை நாங்கள் இருவரும் வெவ்வேறுவிதமாக எங்கள் வகுப்பறையில் செய்தோம். அப்பகுதியை தனித்தனியாக இங்கு பகிர்ந்துள்ளோம்.

**(வீரப்பன்)**

எங்கள் பள்ளியில் மூன்றாம் வகுப்பு படிக்கும் விஜயாவிற்கு இப்பள்ளியில் படித்து வேறு பள்ளிக்கு சென்ற சுசிதாவிடமிருந்து கடிதம் வந்திருந்தது. அவளை நான்காம் வகுப்பிற்கு அழைத்து அனுபவத்தை பகிர்ந்து கொள்ளச் செய்தோம்.

என் பேரு விஜயலட்சுமி. போன வருஷம் சுஜிதா என்கூட படிச்சி இப்ப ஊருக்கு போயிட்டா. போன வாரம் எனக்கு ஒரு லெட்டெர் வருதுன்னு மேடம் குடுத்தாங்க. நான் அதை படிச்சப்ப சந்தோஷமா இருந்துச்சி. என் லெட்டரை வாங்கி எல்லோரும் படிச்சாங்க. நான் வீட்டிற்குப்போய் அம்மாவிடம் காட்டினேன். அம்மா படிச்சிட்டு சிரிச்சாங்க. அவுங்க ஃப்ரண்டு கிட்ட படிக்க குடுத்தாங்க. ராத்திரி அப்பா வந்ததும் அப்பாவிடம் குடுத்தாங்க. எல்லாருக்கும் நல்லா இருந்தது. என்று அனுபவத்தைக் கூறி முடித்தாள். அதோடு அவளுக்கு தோழி எழுதிய கடிதத்தையும் தோழிக்கு அவள் எழுதிய பதில் கடிதத்தையும் படித்தாள்.

இம்மாணவியின் பேச்சு நான்காம் வகுப்பு மாணவர்களைக் கடிதம் எழுதும் ஆர்வத்தை சுலபமாகத் தூண்டியது.

அவ்விரு கடிதத்தையும் காட்டி அதிலுள்ள விஷயம், எழுதும் முறை விலாசம் ஆகியவை பற்றி விரிவாகப் பேசினேன்.

**செயல்பாடு - 2 (கருணாநிதி வகுப்பறை)**

தபால் அலுவலகத்திற்குச் சென்று தபால் அட்டை வாங்கி கடிதம் எழுதத் துவங்கினேன். ஒவ்வொருவருக்கும் ஒரு கடிதம் எழுதவேண்டும் என முடிவு செய்தேன். வகுப்பில் அவர்களைப் பற்றி நான் அறிந்ததைக் குறிப்பிட்டு எழுத வேண்டும் என்பது என் திட்டம். என் திட்டப்படி அலுப்பில்லாமல் 3 மாணவர்களுக்கு எழுதினேன். 4 வது கடிதத்தை எடுத்த பொழுது இவ்வேலையை விட்டு விடலாமா என்று தோன்றியது. வகுப்பிலுள்ள 15 பேருக்கும் குழந்தையையும் உற்றுப் பார்த்தது, மகிழ்ச்சியாக இருந்தது. எழுதுவது சற்று கடினமாகவேதான் இருந்தது. கடிதத்தை ஒரு வேலையாக செய்வது இயல்பாக இல்லாமலிருந்தது. ஆனால் கடிதம்

எழுதுவதற்காக ஒவ்வொரு மாணவர்களின் செயல்பாடுகள் குணங்களை உற்றுப் பார்த்தது மகிழ்ச்சியாக இருந்தது. கடிதங்களை எழுதி முடிக்க வேண்டிய காலம் வந்துவிட்டதால் அவசர அவசரமாக செய்ய வேண்டியிருந்தது. இதை ரகசியமாக வேறு வைத்திருந்தேன்.

மாணவர்களுக்குக் கடிதம் வந்தபொழுது அவர்கள் முகத்தைப் பார்க்க வேண்டுமே. திரும்பத் திரும்ப படித்துக் கொண்டிருந்தனர். படிக்கத் தெரியாதவர்கள் அதைப் பார்த்துக்கொண்டே இருந்தனர். அவர்களும் அதைப் படிப்பதைப் பார்த்தேன். வாயில் முணுமுணுத்தபடி படித்தனர். நான் கூப்பிட்டு கேட்டபொழுது படிக்கத் தெரிவதாகக் குறிப்பிட்டனர். பின் படித்துக் காட்டினேன். அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி.

சிலர் ரொம்ப சத்தமாகப் படித்தனர். மற்றவர்களுடையதை வாங்கிப் படித்தனர். உனக்கு என்ன எழுதியிருக்கிறது என்று கேட்டனர். வகுப்பறை ஆரவாரத்தை அதட்டலுடன்தான் நிறுத்த முடிந்தது.

**செயல்பாடு -3 (கருணாநிதி)**

மாணவர்கள் எனக்கு எழுதிய கடிதம். இதை வீட்டுப்பாடமாகக் கொடுத்திருந்தேன். சிலருக்கு யாரோ எழுதிக் கொடுத்திருந்தனர். சிலரெழுதாமலே எடுத்து வந்திருந்தனர். சிலர் இரண்டு வரி மட்டும் எழுதியிருந்தனர்.


பெருங்களூர்
13/7/2016
அன்புள்ள சாதனா வணக்கம், நான் இங்கு நலம் உன் நலனை அறிய ஆவல். நீ நன்றாக படிக்கிறாயா. பள்ளி உனக்கு பிடித்து இருக்கிறதா
இப்படிக்கு
கருணாநிதி

பெருங்களூர்
13/7/2016
அன்புள்ள கருணாநிதி ஆசிரியர் உங்கள் மாணவி எழுதும் கடிதம் நான் இங்கு நலமாக இருக்கிறேன் நீங்கள் அங்கு நலமா? நான் இங்கு நன்றாக படிக்கிறேன் எனக்கு பள்ளி மிகவும் பிடித்திருக்கிறது. ஆசிரியர்கள் அனைவரையும் பிடித்து இருக்கிறது நன்றி
இப்படிக்கு
சாதனா

**செயல்பாடு - 4**

ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஒரு தபால் அட்டை வழங்கி அவர்களுக்குப் பிடித்தவர்களுக்குக் கடிதம் எழுதும்படி கூறி அது பற்றி சிறு கலந்துரையாடல் ஒன்று நடத்தினேன். யாருக்குக் கடிதம் எழுதப் போகிறீர்கள். என்ன எழுதப் போகிறீர்கள்? என்பது பற்றி உரையாடி பின் எழுத வைத்தேன். மகிழ்ச்சியுடன் எழுதத்துவங்கினர். எழுதத் தெரியாதவர்கள் எதையாவது வரைந்து அனுப்புங்கள் என்று கூறினோம். அவர்களும் வரையத்துவங்கினர். ஒரு மாணவி தாத்தாவிற்கு எழுதுவதால் தாத்தாவை வரைந்திருந்தாள்.

எழுதிய கடிதத்திற்கு முகவரி கண்டு பிடிக்கும் வேலையை செய்தனர். பின் தபால் பெட்டியில் போட்டுவிட்டு வந்தனர்.

**பகுதி - 5**

விண்ணப்பம் எழுதுவோம் பாடம் படித்தோம். அதிலுள்ள விடுமுறை விண்ணப்பம் பற்றி பேசிய பொழுது மாணவர்களுக்கு பாடம் புரிந்திருந்தது தெரிய வந்தது.


பெருங்களூர்
13/7/2016
அன்புள்ள சித்தார்த் அவர்களுக்கு, உன் ஆசிரியர் எழுதும் கடிதம். நான் இங்கு நலமாக இருக்கிறேன். நீ அங்கு நலமாக இருக்கிறாயா. உனக்கு யார் ஓவியம் வரைய கற்றுக் கொடுத்தது.
நன்றி
இப்படிக்கு

பெருங்களூர்
15/07/2016
அன்புள்ள கருணாநிதி ஆசிரியர், உங்கள் அன்பு மாணவன் எழுதும் கடிதம் நான் இங்கு நலமாக இருக்கிறேன் நீங்கள் அங்கு நலமாக இருக்கிறீர்களா?
எனக்கு ஓவியம் வரைய கற்றுக்கொடுத்தது என் அண்ணன் பார்த்திபன் இப்படிக்கு
நன்றி சித்தார்த்தன்

விடு முறை விண்ணப்பம் எதற்காக வேண்டும் என்றும். எழுதும் முறையையும் அறிந்துகொள்ள சிறு பயிற்சி அளித்தோம்.

- அனுப்புனர் - பெறுநர் புரிந்து கொள்ள
- கலா ஆசிரியருக்குக் கடிதம் எழுதினாள்.
- ஆசிரியர் தலைமை ஆசிரியருக்குக் கடிதம் எழுதினார்.
- அம்மா பாட்டிக்குக் கடிதம் எழுதினாள்

ஒவ்வொரு வரியாக நான் குறிப்பிட்டதும் அவர்கள் பெறுநர் யார் அனுப்புனர் யார் என்று வேறு படுத்துவர்.

- கடிதத்தை எப்படித் துவங்குவோம் விண்ணப்பத்தை எப்படித்துவங்குவோம் என்று வேறுபடுத்தஞ்

(அம்மா, ஆசிரியர், தலைவர், தாத்தா, தோழி...)

அன்புள்ள - யாருக்கெல்லாம்?

மதிப்பிற்குறிய- யாருக்கெல்லாம்?

பயிற்சி செய்து பார்த்தோம்.

- இதைப்போலவே கடிதப்பகுதிக்கு...

திருமணத்திற்கு செல்வதால், பிறந்தநாள் விழாவில் பங்கெடுப்பதால், உடல் நிலை சரியில்லாததால்ஞ்போன்ற காரணங்களைக் கூறி, அக்காரணங்களுக்காக விடுமுறை எடுப்பது பற்றி சொல்லிப் பழகினோம்.

- நன்றி மற்றும் கையெழுத்துப் பகுதிக்குப் பயிற்சியளித்தபிறகு விடுமுறை விண்ணப்பத்தை முறையாக எழுதுவதற்கான பயிற்சித்தாளை தயாரித்து அளித்தேன்.

- அவர்களால் சுலபமாக எழுதமுடிந்தது.
- எழுதத்தெரியாத மாணவர்களுக்கும் கடிதம் எதற்கு எப்படி செயல்படுகிறது என்பது முழுமையாகப் புரிந்தது. அதோடு கடிதம் வாசிக்க வேண்டும் என்ற ஆவல் வந்தது. இந்த ஆவல் அவர்களின் வாசிப்பிற்கு தனிப்பயிற்சி அளிக்க உதவியாக இருக்கும்.

**பகுதி -5**

கட்டுரை நோட்டில் விடுமுறைவிண்ணப்பம் எழுத வைத்தோம்.

தயாரித்து வைத்திருந்த பயிற்சித்தாளை செய்ய வைத்து அவர்களது புரிதலை புரிந்து கொண்டோம். பயிற்சி தாள் உன் அம்மா ஊருக்கு சென்றிருக்கிறார்கள். அவர்கள் திரும்பி வர இன்னும் 10 நாட்கள் ஆகும். அவர்கள் இல்லாமல் உனக்கு கஷ்டமாக இருக்கிறது. அதைப் பற்றி அவர்களுக்குக் கடிதம் எழுதுக.






**அன்புள்ள அம்மாவிற்கு,**

**உங்கள் அன்பு**

---

---

---

---

**அனுபவக் குறிப்பு:**

**கருணாநிதி:**

• இப்பாடம் முடிவடைந்து மூன்று நாட்களில் நான் விடுமுறை எடுப்பது பற்றி மாணவர்களுக்குக் கூறினேன். அவர்கள் எதற்கு என்றார்கள். ஒரு இலக்கியக் கூட்டத்தில் கலந்து கொள்ள என்றேன்.

• விடுமுறை விண்ணப்பம்? (ஆசிரியர்கள் மாணவர்களுக்கு)என்று ஒரே குரலில் கேட்டார்கள். தலையை குணிந்து உட்கார்ந்து விட்டேன். அப்படி கேட்கக் கூடாது என சில மாணவர்கள் அறிவுரை கூறத்துவங்கினர். நான் எழுந்து கரும்பலகையில்



விடுமுறை விண்ணப்பம் எழுதிவிட்டு கிளம்பினேன். இது ஒரு சிறந்த அனுபவமாகவும் மாணவர்கள் எனக்குக் கற்றுக்கொடுத்தாகவும் இருந்தது.

• தனக்கு வந்த கடிதத்தை மாணவர்கள் படித்த பொழுது படிக்க முடியாத மாணவர்களின் இயலாமையை விட அவர்கள் அவர்கள் படிக்க வேண்டும் என்ற வேட்கை இருந்ததை கவனிக்க முடிந்தது.

• கதையை வரிசைப்படுத்துவதற்குள் அதை மனப்பாடமே செய்து விட்டனர். அதை அடிக்கடி மணப்பாடப் பாடலை சொல்வது போல் சொல்லித் திரிந்தனர்.

**வீரப்பன்:**

• பள்ளிமுழுவதும் கடிதம் எழுதும் தகவல் பறந்து சென்றது. மற்ற வகுப்பு மாணவர்கள் சார் நானும் கடிதம் எழுத வேண்டும் எனக்குத் தபால் அட்டை வேண்டும் என்றனர்.எழுதிக்கொண்டு வந்து காட்டுவதென்றால் தருகிறேன் என்று கூறி கொடுத்தேன். பள்ளிமுழுவதும் கடிதம் பற்றிய பேச்சாகவே இருந்தது. தின் பண்டப் பொருளைப்போல் இருந்தது.

• மாதிரிக்காக கொண்டு சென்றிருந்த கடிதங்களைக் குழந்தைகள் கூட்டம் கூட்டமாகப் படித்தனர்.




**நல். கருணாநிதி**, தொ.ப.ஆ, அ.தொ.ப. பெருங்களூர்



**வா. வீரப்பன்**, தொ.ப.ஆ, அ.தொ.ப. அய்யங்குட்டிபாளையம்

Teacher Reflections

# காடு எம் வீடு

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 5, பருவம் 1, பாடம் 1**

**"வாசித்து, வினாஎழுப்பி, விவாதித்து, கதையெழுதி, வரைந்து வண்ணமிட்டு, சுவரொட்டி தயாரித்து, நாடக வசனம் எழுதி நடித்து மகிழ்ச்சியாகக் கற்றோம்"**

சு.கவிதா

மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்த ஆசிரியர்களாகிய நாம் பல்வேறுபட்ட செயல்பாடுகளைச் செய்கின்றோம். மாணவர்கள் மகிழ்ச்சியுடன் பயமின்றி கற்றலில் ஈடுபடும் போது அவர்களின் அறிவும் திறனும் உற்சாகத்துடன் வெளிப்படுகின்றன. 'காடு எம் வீடு' என்ற பாடத்தின் வாயிலாகச், சிறிய கதைகளை வாசித்து அவற்றின் மையக் கருத்தைப் புரிந்து கொள்ளுதல், மழையின் முக்கியத்துவத்தை உணர்தல், மழைக்கும் மரங்களுக்கும் உள்ள தொடர்பை அறிதல் போன்ற திறன்களை மேம்படுத்தச் சில வகுப்பறைச் செயல்பாடுகளைத் திட்டமிட்டேன். அவற்றை வகுப்பறையில் செயல்படுத்தும் போது எனக்குக் கிடைத்த அனுபவங்களை இக்கட்டுரையில் எழுதியுள்ளேன்.

விலங்குகளின் கதைகளை வீடியோவாகத் திரையிட்டுக் காட்டினேன் (சோம்பேறி கிளிகள், புத்திசாலி ஆடு, சிங்கம் ஆகியவை). ஒவ்வோரு கதையின் முடிவிலும் அவர்களது சிந்தனைத் திறனையைத் தூண்டும் விதமாகப் பல கேள்விகளைக் கேட்டேன். அவர்கள் அளித்த பதில்களைக் கேட்டு அசந்து போனேன். அவற்றுள் சில:

1. கிளிகள் ஏன் கொடியை அகற்றவில்லை?

**செடிகளைக் கொல்ல கிளிகளுக்கு விருப்பமில்லை; அவர்களுக்கு வாழ புதிய இடம் கிடைத்த மகிழ்ச்சியில் அதைப்பற்றி அவர்கள் சிந்திக்க வில்லை; சிறிய செடி தானே என்று அலட்சியமாக இருந்தன; அவர்களின் தலைவரின் ஆலோசனையைப் புறக்கணித்து விட்டன.**

2. கிளிகளுக்குச் செடிகளைத் துன்பப்படுத்த மனமில்லை என்றால், வேறு என்ன செய்திருக்கலாம்?

**செடிகளை அந்த இடத்தில் இருந்து எடுத்து, வேற இடத்தில் நட்டு வைத்திருக்கலாம்; அவர்கள் செடியின் மீது சில முட்களைப் போட்டிருக்கலாம்; வேறு மரத்தைத் தேடிச் சென்று கூடு கட்டியிருக்கலாம்.**

இந்தக் கேள்வி பதில்களின் தொடர்ச்சியாக மழைக்கும் மரங்களுக்குமான தொடர்பை உரையாடலாகத் தொடர்ந்தோம். "மழை வரணும்னா, மரம் வளர்க்கனும் மிஸ்" என்றே பலரும் கூறினர். பிறகு வினாக்கள் கேட்டுக் கேட்டு அவர்களாகவே நீரின் சுழற்சியையும், மழைக்கும் மரங்களுக்கும் உள்ள தொடர்பையும் கூறினர்.

பிறகு நான் புதிய கதை ஒன்றைக் கற்கப் போகிறோம் எனக் கூறிப் புத்தகத்தைக் கையில்

முழு வகுப்பும், புத்தகத்தில் உள்ள பாடத்தைப் பார்த்து, "இதில் எங்குமே தண்ணீர் இல்லை என்று குறிப்பிடவில்லை" என்றனர். ஒரு மாணவன் மட்டும், "மழை முன்புபோல் அதிகமாக இல்லை என்றே இருக்கிறது" என்று பாடப்பகுதியைச் சுட்டிக் காட்டினான்.

எடுத்து நான் மட்டுமே படிக்க மாணவர்கள் அவர்கள் புத்தகத்தில் விரல் வைத்து கவனித்தனர். முழு பாடத்தையும் படிக்காமல், எங்கெல்லாம் வினாக்கள் கேட்க வேண்டுமோ, அங்கெல்லாம் நிறுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடிப் பின் படிப்பதைத் தொடர்ந்தேன். **(கேட்க வேண்டிய வினாக்களை முன்பே பாடத்தில் எழுதி வைத்துக் கொள்ளுதல் நலம்).** கலந்துரையாடலில் கேட்கப்பட்ட சில வினாக்களும் பதில்களும் இங்கே!

கே: காட்டிற்கு ராஜா யார்?

ப: சிங்கம்

கே: இக்கதையில் புலி தான் அனைவரையும் அழைத்துக் கலந்தாலோசித்து உரையாடலை முன்னெடுத்துச் செல்லுகிறது. அப்படியென்றால் அது தான் இக்காட்டிற்கு ராஜாவா?

ப: ஆமாம்

கே: புலி காட்டிற்கு ராஜாவாக இருக்கலாமா?

ப: **ஏன் இருக்கக் கூடாது? நாம் நம்முடைய வகுப்பில் குழுத்தலைவர்களை ஒவ்வொரு முறையும் மாற்றுகிறோம். யார் வேண்டுமானாலும் பொறுப்பு எடுக்கலாம். அதுபோல எந்த விலங்கும் ராஜாவாகலாம்.**

கே: விதைப்பதற்கு மண்ணை தோண்டுவோம் என்று முயல் ஏன் கூறியது?

ப: ஏனென்றால் அதற்குக் கூர்மையான பற்கள் இருக்கின்றன.

கே: இரவில் மரங்களைப் பாதுகாப்பதாக நரி ஏன் கூறியது? மற்ற விலங்குகள் ஏன் கூறவில்லை?

ப: **நரி அது இருக்கும் இடத்திலிருந்தே ஊளையிட்டுச் சீக்கிரமாகச் செய்தியை மற்றவர்களுக்குத் தெரிவிக்கும்; பாம்பால் வேகமாக நகரவோ மற்றவர்களைக் கூப்பிடவோ முடியாது; பறவைகள் பறந்துசென்று ஒவ்வொருவரிடமும் கூற வேண்டும்; யானை நாள் முழுவதும் நீர் பாய்ச்சுகிறது, அதற்கு இரவில் ஓய்வு தேவை.**

கே: கிளிகள் மா, தென்னை போன்ற மரங்களை வளர்க்காமல், ஆல், அத்தி, வேம்பு போன்ற மரங்களை வளர்ப்பதேன்?

ப: மா, தென்னை போன்ற மரங்களின் பழங்கள் அளவில் பெரியவை. பறவைகள் அவற்றை விழுங்கவோ எடுத்துச் செல்லவோ முடியாது.

கே: மனிதர்கள் ஏன் மரத்தை வெட்டுகின்றனர்?

ப: வீடு கட்டுவதற்கும், மரப் பொருள் செய்வதற்கும்

கே: அப்படியென்றால் அப்பொருட்களை மரங்கள் தவிர வேறு எவற்றைக் கொண்டு செய்வது?

ப: விழுந்த மரங்களை பயன்படுத்தலாம் அல்லது இரும்பால் செய்துகொள்ளலாம்.

கே: நெகிழியால் கூடாதா?

ப: கடந்த வருடம், நெகிழி பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்று நீங்கள்தான் சொன்னீர்கள். அதனால் ஏற்படும் தீங்குகளையும் படித்தோம்.

ஒரு மாணவன் இறுதியில் என்னிடம் ஒரு கேள்வி கேட்டான். **காட்டில் தண்ணீர் இல்லை என்றால், மரம் வளர்ப்பதற்கு தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது?** அதன் பிறகு முழு வகுப்பும், புத்தகத்தில் உள்ள பாடத்தை மீண்டும் படித்துவிட்டு, “இதில் எங்குமே தண்ணீர் இல்லை

பல்வேறு செயல்களில் பங்கேற்கும் போது வேறுபட்ட கற்றல் நிலைகளில் உள்ள அனைத்து மாணவர்களும் கற்றலில் ஈடுபடுகின்றனர்.

என்று குறிப்பிடவில்லை” என்றனர். ஒரு மாணவன் மட்டும், “மழை முன்புபோல் அதிகமாக இல்லை என்றே இருக்கிறது” என்று பாடப்பகுதியைச் சுட்டிக் காட்டினான்.

**இதுபோன்ற கலந்துரையாடல் அனைத்து மாணவர்களும் கதையைத் திரும்ப படிக்கவும் விவரங்களைத் தேடவும் பாடத்தைத் திரும்பச் சென்று பார்ப்பதற்கும் ஏதுவாக இருந்தது.**

பிறகு நான் பாடத்தைத் தக்க உச்சரிப்புடனும் ஏற்ற இறக்கங்களுடனும் உணர்வுகளுடனும் வாசித்தேன். மாணவர்கள் வரிகளுக்கு அடியில் விரல் வைத்து நான் வாசிப்பதைக் கவனித்தனர். எனது மாதிரி வாசிப்பைத் தொடர்ந்து, மாணவர்களின் தொடர்வாசிப்பு நிகழ்ந்தது. வகுப்பில் உள்ள 36 மாணவர்களும் வட்டமாக அமர்ந்து ஆளுக்கு ஒரு வரி படித்தனர்.

**இரண்டு மாணவர்களால் சரியாக வாசிக்க முடியவில்லை; ஐந்து மாணவர்கள் எழுத்துக் கூட்டி மெதுவாக வாசித்தனர்.** மற்ற மாணவர்கள் மிக நன்றாகவேப் படித்தனர்.

**கதைப்புத்தகம்**:

மாணவர்கள் ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்; ஒவ்வொரு குழுவும் ஒரு கதைப் புத்தகத்தை உருவாக்கியது. கதைப்புத்தகம் உருவாக்க, கதை வரைபடத்தில் இருந்து ஆரம்பித்தோம்.



**கதை வரைபடம்**:

ஒவ்வொரு மாணவரையும் இக்கதையைச் சுருக்கி 5 கட்டமைப்புகளில் கதை வரைபடம் ஒன்றை உருவாக்கச் சொன்னேன். சென்ற ஆண்டு எழுதியதின் பயனாகப் பெரும்பாலான மாணவர்கள் சிறப்பாகவே எழுதி வந்தனர். ஒரு மாணவனின் கதை வரைபடம் என்னை ஆச்சரியப்பட வைத்தது. கதையைச் சுருக்கி அவனது மொழியில் மிக அழகாக எழுதி இருந்தான். மற்ற மாணவர்கள் புத்தகத்தில் இருந்த வரிகளையே பயன்படுத்தி எழுதி வந்தனர்.

**கதைப்புத்தகம்**:

கதை வரைப்படத்தின் ஒவ்வொரு பகுதியும் கதைப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமாக மாறியது. மாணவர்கள் கதை வரிகளுக்கேற்ற படங்களை வரைந்து வண்ணமிட்டனர். ஐந்து கதை அட்டைகளையும் ஒன்றாக இணைத்து கதைப் புத்தகம் உருவாக்கினோம். அதற்கு மேல் ஒரு அட்டையை வைத்து அக்குழு விரும்பும் ஒரு தலைப்பை எழுதினர். அதற்கடியில் குழுவில்



உள்ள மாணவர்களின் பெயரும் எழுதப்பட்டது. கதைப்புத்தகம் தயார். கதைகளை மற்ற குழுக்களோடு பகிர்ந்து கொண்டனர்.

**சுவரொட்டி**:

கதைப்புத்தகத்தை உருவாக்கியது போல,

சுவரொட்டிகளைத் தயார் செய்வதற்கு முழக்கங்களை எழுதினோம்.

**முழக்கங்கள்**:

மரங்களைப் பாதுகாத்தல், நீர்பாதுகாப்பு, காடுகளைப் பாதுகாத்தல், விலங்குகளிடத்தும் அன்பு செலுத்துதல் போன்ற தலைப்புகளில் முழக்கங்கள் எழுதச் சொன்னேன். எடுத்துக்காட்டிற்காக, நான் சில முழக்கங்களை எழுதிக் காட்டினேன். இச்செயலில் மாணவர்கள் அவ்வளவாக ஆர்வம் காட்ட வில்லை. 20 மாணவர்கள் மட்டுமே எழுதி வந்தனர்.

- மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம்.
- புகை பிடிக்காதீர்; புற்றுநோய் ஏற்படும்.
- மண்ணுக்கு மரம் வேண்டும்; மனிதனுக்கு மழை வேண்டும்.
- மரங்கள் மண்ணின் கண்கள்.

என்பன போன்ற சில முழக்கங்களை எழுதி வந்தனர்.

**சுவரொட்டி தயாரித்தல்**:



அவர்கள் எழுதிய முழக்கங்களையும் கதைகளையும் கருவாகக் கொண்டு ஒவ்வொரு குழுவும் ஒரு சுவரொட்டியைத் தயாரித்தனர். **இச்செயல்பாடு அவர்களுக்குப் புதியது என்பதால் அதிக நேரம் எடுத்தனர். ஒவ்வொரு முறையும் என்னிடம் வந்து அவர்கள் செய்வது சரிதானா என உறுதிபடுத்திக் கொண்டனர்.** சுவரொட்டிகள் தயாரானவுடன் வகுப்பறைச் சுவரில் ஒட்டினோம்.



**நாடகம் நடித்தல்**:

இக்கதையை நாடகமாக நடிக்கலாமா என்று ஒரு மாணவி என்னிடம் கேட்டாள். நாடகம் நடிப்பதற்கான வரைமுறைகளைச் சொன்னேன்.

- படக்கதையை அப்படியே நடிக்க வேண்டும் என்பதில்லை. புதிய கதாபாத்திரங்கள்/ வசனங்களைச் சேர்க்கலாம். கதையைத் தொடரலாம்; முடிவை மாற்றலாம். மேலும் உங்கள் கற்பனையைச் சேர்க்கலாம்.
- குழுவில் அமர்ந்து அவரவர் கதாபத்திரத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவரவர் கூறப்போகும் வசனத்தையும் குழுவில் விவாதிக்க வேண்டும்.

புதிய கதாபாத்திரங்கள் சேர்ந்தன. ஆனால் நாடகம் புத்தகத்திலுள்ள கதையாகவே இருந்தது. புத்தக வாக்கியங்கள் வசனங்களாக மாறின.

ஒரு குழுவில் ஒரு மாணவன் வரவில்லை. அதனால் அப்பாத்திரத்தை நான் தான் ஏற்று நடிக்க வேண்டும் என்று அக்குழு மாணவர்கள் கேட்டனர். நானும் சம்மதித்தேன். எனக்கு புலி கதாபாத்திரமும் அது பேசவேண்டிய வசனத்தையும் கொடுத்தனர். கைப்பேசி மூலம் அனைவரையும் கூட்டத்திற்கு அழைக்க வேண்டும். ஒவ்வொரு விலங்கு வரும்

போதும் 'வருக! வணக்கம்' என்று வரவேற்று அமர வைக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு குழுவும் மும்முரமாகச் செயலில் ஈடுபட்டனர்.

அடுத்த நாள் வகுப்பில் அவரவருக்குத் தேவையான


புலி: கிளி அக்கா இங்கே வாருங்கள்
இங்கே அனைவரையும்
அழைத்து வாருங்கள்.

கிளி: எதுக்கு அண்ணா

புலி: ~~கிளி அண்ணா~~! அனைவரும்
வரட்டும் சொல்கிறேன்.

கிளி: சரி அண்ணா!

எல்லாரும்: வணக்கம் அண்ணா

யானை: இங்கு எங்களை ஏன்
அழைத்தீர்கள்.

புலி: நம் வாழும் காடு மிக விபத்தை
விதிக்கிறது வெட்டுவதால் தான்
காடு அழிகிறது.

யானை: நம்பலா அழிக்கிறோம்
இந்த மனிதர்கள் தான்
காட்டை அழிக்கிறார்கள்.

முகமூடியை (mask) எடுத்து அதற்கு வண்ணமிட்டனர். பின்பு அதை ஒரு காகிதத் தட்டில் (paper plate) ஒட்டி ஓரங்களில் நூலைக்கட்டி வயிற்றில் கட்டிக் கொண்டனர்.

நாடகம் அரங்கேறியது. ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு விதமாக நாடகத்தைத் தொடங்கியது.

- தண்டோரா அடித்து
- கிளியைத் தூதாக அனுப்பி
- கைப்பேசியில் அழைத்து
- சுற்றறிக்கை அனுப்பி
- சோகமாக இருந்த புலியைக் கடந்து போகும் விலங்குகள் விசாரித்து...


பறவைகள்: நம் காட்டை பசுமையாக்க
நாங்கள் என்ன செய்ய
வேண்டும்?

புலி: நீங்கள் எல்லாரும் பழங்கள்
குருவிகளை அந்த பழங்களை
தின்று பழத்தில் உள்ள
கொட்டையை எடுத்து காடெல்லாம்
பரப்புங்கள்

கிளி: அப்போ நாங்கள் வேப்ப ஆல
அத்தி, அரசு இந்த கொட்டையை
எல்லாம் நிலத்தில் எச்சமிட்டுப்
பரப்புகிறோம்.

முயல்: நான் பல்லம் தோண்டுகிறேன்
கிளி அக்கா விதையை
போட்டும்.

யானை: அப்போ நான் என் தும்பிக்கையில்
தண்ணீர் ஊற்றுகிறேன்.

நரிகள்: யாராவது செடிகளை
மேதுச்சிட்ட அதனால் தான்
நான் இரவும் பகலும்
பாதுகாக்கிறோம்.

என விதவிதமாக இருந்தது. **மாணவர்கள் இயல்பாக நடித்ததோடு சொந்த மொழியில் பேசியது சிறப்பு.**

புத்தகத்தில் கதையின் முடிவில், 'ஆடிப்பாடினர்' என்று எழுதியிருக்கும். அதனால் நான் சொல்லாமலேயே அனைத்து குழுவும் 4 வரி பாடல் எழுதிப் பாடி ஆடினர். இது எனக்கு வியப்பை அளித்தது.

ஒரு பாடத்தைக் கதையாகக் கேட்டல், முறையாக வாசித்தல், வினாக்களுக்கு விடை தேடுதல், பாடப் பொருளைக் கடந்து யோசித்தல், கதை வரைபடம் வரைதல், முழக்கங்கள் எழுதுதல், கதைப்புத்தகம்/ சுவரொட்டி தயாரித்தல், நாடக வசனம் எழுதி நாடகமாக நடித்தல் போன்ற பல்வேறு செயல்களில் பங்கேற்கும் போது வேறுபட்ட கற்றல் நிலைகளில் உள்ள அனைத்து மாணவர்களும் கற்றலில் ஈடுபடுகின்றனர். அடுத்தமுறை வேறொரு கற்றல் அனுபவத்துடன் உங்களைச் சந்திக்கிறேன்.


புலி: சில ஆண்டுகள் கழிந்தன
காடெங்கும் பசுமை! பசுமை!
விலங்குகளும் பறவைகளும்
ஆடிப் பாடின.

பாட்டு

ஐயா ஜலி ஜலி ஜலி
காடெங்கும் பசுமை! பசுமை!
பசுமை! இடம் திரும்பின
ஆந்திரம்பி ஐயா ஜலி
ஜலி ஜலி ஜலி!!!

நன்றி



**சு. கவிதா**, தொ.ப.ஆ, அ.தொ.ப. மணவெளி (அ)

# நேர்மை தந்த பரிசு

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 4, பருவம் 1, பாடம் 5**

கோ. காயத்ரி
சு. ராஜகுமாரி

**"நல்ல நல்ல கதைகளை வாசித்து நற்பண்புகளை வளர்ப்போம்"**

**பாடநோக்கங்கள்:**

- சிறுசிறு கதைகளை வாசித்து அவற்றின் பொருளை அறிதல்.
- நேர்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்து நற்பண்புகளை வளர்த்தல்.

**பாடச்செயல்பாடுகள்:**

**மாணவர்களைத் தயார் செய்தல்:**

- மாணவர்களிடம் கதை அட்டைகளைக் கொடுத்து வாசிக்கச் செய்து இறுதியில் கதையைத் தொகுத்துக் கூறச் செய்தல். இதன் மூலம் ஆசிரியர் தம் மாணவர்களின் வாசிப்புத் திறனை அறிந்து கொள்ள முடியும்.
- குழுச்செயல்பாடு: மாணவர்களிடம் நற்பண்புகளை விவரிக்கும் கதைகள் சிலவற்றைக் கூறி அதற்கான முடிவைக் கூறச் செய்தல்.

**பாடப்பொருளை புரிந்து கொள்ளுதல்:**

- ஆசிரியர் படங்களின் உதவியோடு பாட புத்தகத்தில் உள்ள கதையைக் கூறுதல்.
- ஆசிரியர் கதையை ஏற்ற இறக்கத்துடனும் உணர்வுகளுடனும் வாசித்தல். புதிய சொற்களுக்கான விளக்கங்களை அளித்தல்.
- இடையிடையே மாணவர்களின் புரிதலை அறிய வினாக்களை எழுப்பி வாழ்க்கையோடு தொடர்பு படுத்துதல். (உ.ம்.)
  - விதை முளைக்காததற்குக் காரணம் என்ன?
  - பொதுவா கவிதை முளைக்க நாம் என்னென்ன செய்ய வேண்டும்?
  - இளவரசன் ஏன் நேர்மையான பெண்ணைத் திருமணம் செய்ய வேண்டும் என்று நினைத்தான்?
- மாணவர்கள் ஒவ்வொருவராகக் கதையை வாசித்தல்.

**தொடர்பணி:**

- ஆசிரியர் இக்கதையை எளிமையாக்கி, பத்து வரிகளில் எழுதி, கதை வரிகளாக மாணவர்களிடன் தருவார். சிறுசிறு குழுக்களாக மாணவர்கள் அவற்றை வரிசைப்படுத்தி வெள்ளைத் தாளில் ஒட்டுவர்.
- சிறு குழுக்களில் மாணவர்கள் இக்கதையை நாடக வசனமாக எழுதி நடிப்பர்.
- ஆசிரியர் மாணவர்களிடம் எழுத்து அட்டைகளைக் கொடுப்பார். மாணவர்கள் கதையில் வரும் வார்த்தைகளை உருவாக்குவர்.
- மாணவர்கள் 'பட-சொல்' கதைகளை வாசித்தல். பின் படங்களின் பெயர்களை எழுதுதல்.
- மௌன விளையாட்டு: சிறு சொற்கள் அடங்கிய அட்டைகளைக் கொடுத்து அதில்

உள்ளவாறு ஒவ்வொரு மாணவனையும் பேசாமல் நடிக்கச் செய்தல்; மற்ற மாணவர்கள் அவ்வார்த்தையைக் கண்டுபிடித்துக் கூறுதல். (உ.ம்.) மலர், சிலை, கவலை, வீடு, அரண்மனை, பெண், நீர், உழவர்

**செயல்திட்டம்:**

ஆசிரியர் மாணவர்களைத் தங்களுக்குப் பிடித்தவர், பிடிக்காதவர் என இரண்டிரண்டு நபர்களின் பெயர்களையும், ஏன் என்ற காரணத்தையும் எழுதச் சொல்லுதல். அவர்கள் கூறும் காரணங்களைக் கரும்பலகையில் எழுதிப், பிடித்த-பிடிக்காத குணங்களைப் பற்றி ஆசிரியர் மாணவர்களுடன் உரையாடுதல். பிறகு ஒவ்வொருவரும் தான் வளர்த்துக் கொள்ள விரும்பும் இரண்டு குணங்களை எழுதிச் சுவரில் ஒட்டுவர்.

**வளப்பையில் உள்ள வகுப்பறை வளங்கள்:**

1. **கதை அட்டைகள்**

**அ. பேசும் குகை**

காட்டில் சிங்கம் ஒன்று பசியுடன் அலைந்தது. குகைக்குள் ஏதாவது விலங்கு வரும் என்று எண்ணி அதற்குள் சென்று பதுங்கியது. தன் குகைக்குத் திரும்பிய நரி சிங்கத்தின் காலடியை மண்ணில் பார்த்தது. நரி, “குகையே இன்று ஏன் என்னிடம் பேசாமல் இருக்கிறாய்? உள்ளே யாராவது இருக்கிறார்களா?” எனச் சத்தமாகக் கத்தியது. அப்போது சிங்கம்..






**ஆ. சோம்பேறி கொக்குகள்**

ஒரு காட்டில் ஒரு பெரிய மரத்தில் கொக்கு கூட்டம் ஒன்று வாழ்ந்து வந்தது. மரத்தில் ஒரு கொடி வளரத்தொடங்கியது. வயதான கொக்கு ஒன்று அதைக்காட்டி அக்கொடியால் ஆபத்து வரும் என்றும் அதைப் பிடுங்கி எறிய வேண்டும் என்றும் கூறியது. ஆனால் கொக்குகள் அதைக் கேட்கவில்லை. கொடி மரத்தைச் சுற்றி வளர்ந்தது..

**இ. முரசின் ஓசை**



ஒரு நரி வேட்டையாடி விட்டு தன் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தது. வழியில் ஒரு மரத்தின் அடியில் பெரிய முரசு ஒன்றைக் கண்டது. அப்போது மரத்திலிருந்து ஒரு பழம் அதன் மீது விழுந்ததும் 'டமடமவென்று' பேரோசை கேட்டது. அதைக்கேட்ட நரி அச்சத்தால் நடுங்கியது. ஏதோ புதிய விலங்கு ஒன்று காட்டிற்குள் வந்து விட்டது என எண்ணி ஓடிச்சென்று மரத்தின் பின் ஒளிந்து கொண்டது. ஒரே அமைதி. நரி மெதுவாக முரசின் அருகில் சென்று ..



**ஈ. எலிகளின் உதவி**

ஒரு காட்டில் ஆற்றங்கரையில் எலிகள் கூட்டமாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் யானைக்கூட்டம் அவ்வழியே தண்ணீர் குடிக்கச் சென்றது. தவறுதலாக எலிகள் மீது கால் வைத்தலால் நிறைய எலிகள் இறந்தன. யானைகளை வேறு பாதையில் செல்லுமாறு எலிகள் கெஞ்சின. அடுத்த நாள் யானைகள் வேறுபாதையில் செல்லும்பொது...



**உ. பாம்பின் விரதம்**

ஒரு நதிக்கரையில் வயதான பாம்பு ஒன்று வசித்து வந்தது. இப்போதெல்லாம் அதனால் ஓடிச்சென்று இரைபிடிக்க முடியவில்லை. அது சோகமாக இருந்ததைப் பார்த்து தவளைகள் ஏன் என்று கேட்டன. பாம்பு தான் தவளைகளைச் சாப்பிடாமல் விரதம் இருப்பதாகவும் அவர்கள் தரும் உணவை மட்டுமே சாப்பிடப் போவதாகவும் கூறியது. பிறகு அது நாம் அனைவரும் ஒன்றாக விளையாடலாம் என்று கூறியது. தவளைகளும்...

(முழுமையான கதை அட்டைகளை 'வளப்பையில்' காணலாம்.)

2. **முடிக்கப்படாத கதைகள்**

அ. தேர்வு அறை

ஆ. விரும்பிய பொருள்

இ. முதியவரின் பணப்பை

(உ.ம்.)

ஒரு வயதான முதியவர் அவரது பணப்பையைத் தொலைத்து விடுகிறார். வழியில் வரும் அனைவரிடமும் விசாரிக்கின்றார். நீ இல்லை என்று கூறி விட்டுச் செல்கிறாய். சிறிது தூரம் சென்றவுடன் அந்தப்பை உன்னிடம் கிடைக்கிறது. ஆனால் அந்த முதியவர் அங்கு இல்லை. அவர் யார் என்று உனக்குத் தெரியாது. இப்போது நீ என்ன செய்வாய்?

(அனைத்து கதைகளும் பயிற்சித்தாள் வடிவில் வகுப்பறை வளப்பையில் உள்ளன.)

3. **புதிய வார்த்தைகளும் அவற்றிற்கான படங்களும்**

(மின்னட்டைகள் வகுப்பறை வளப்பையில் உள்ளன)

4 **மாணவர்கள் வரிசைப்படுத்தக் கதைவரிகள்** (ஆசிரியர் வரிகளை வெட்டிக் கொடுக்க வேண்டும்)

- இளவரசர் நேர்மையான பெண்ணைத் திருமணம் செய்ய விரும்பினார்.
- அமைச்சர்களிடம் கருத்துக் கேட்டார்.
- பல பெண்கள் அரண்மனைக்கு வந்தனர். அவர்களுடன் பணிப்பெண்ணின் மகளும் வந்தாள்.
- இளவரசர் ஆளுக்கு ஒரு விதையைக் கொடுத்தார்.
- விதையைச் செடியாக்க ஆறு மாத அவகாசம் கொடுக்கப் பட்டது.
- பணிப்பெண்ணின் மகள் பல முயற்சிகளைச் செய்தாள். விதை முளைக்கவில்லை.
- மற்ற பெண்கள் செடியுடன் அரண்மனைக்கு வந்தனர்.
- பணிப்பெண்ணின் மகள் மட்டும் வெறும் தொட்டியுடன் வந்தாள்.
- இளவரசர் தான் கொடுத்தது திறனற்ற விதை என்பதைக் கூறினார்.
- பணிப்பெண்ணின் மகளின் நேர்மையைப் பாராட்டினார். திருமணம் செய்து கொண்டார்.

(ஆசிரியர் மாணவர் குழுக்களுக்குத் தேவையான எண்ணிக்கையில் நகல் எடுக்க ஏதுவாகக்

கதைவரிகள் கொண்ட தாள் வகுப்பறை வளப்பையில் இணைக்கப்பட்டுள்ளது)

5. **பணித்தாள்: பட-சொல் கதைகள்**

வாசிக்கச் சிரமப்படும் மாணவர்களை வாசிக்கத் தூண்டுவன இந்தப் 'பட-சொல்' கதைகளாகும். சொற்களுக்குப் பதில் அவற்றின் படங்களைப் பயன்படுத்துவதால், மாணவர்கள் மீதம் உள்ள சொற்களை வாசித்துப் படங்களோடு பொருத்திக் கதையின் பொருளைப் புரிந்து கொள்வர். ஒவ்வொரு படத்திற்கும் அடுத்துள்ள கோட்டில் படத்தின் பெயரை எழுதுவதால், மாணவர்கள் எழுத்துப் பயிற்சியையும் மேற்கொள்கின்றனர்



**கோ. காயத்ரி**, தொ.ப.ஆ அ.தொ.ப., மடுகரைபேட்



**சு. ராஜகுமாரி**, தொ.ப.ஆ அ.தொ.ப., மடுகரைபேட்

Lesson Ideas

# Food We Eat

**CBSE, EVS Class - III, Unit - 6**

**K. Maheswari**

**Guess... Juicy fruit from tall tree?**

## Learning Objectives:

- Appreciation of cultural diversity in food. Also to appreciate and understand the food needs of various people
- Sources of food – plant and animal sources
- Values – avoid wasting food, share food, respect food customs of other people

**Previous Knowledge**

Names of vegetable and fruits, food items and their ingredients.

## Engage

The discussion could be started with a video on popular food items. (https://www.youtube.com/watch?v=KTie2rmrFhk). Students could be asked some questions about food items shown in the video.



*Screenshot from the title song (Intha Porapputhan) of the movie 'Un Samayal Arayil'*

## Explore

- Sources of food: List different foods like vegetables, pulses, honey, milk, curd, etc. and ask the children to differentiate based on food from plants and food from animals.
- Favorite foods: Children could be asked to name their favorite/ least liked food and their reasons for the same.(E.g. I like Halwa because it is sweet; I dislike Pongal because of the taste of ghee). The activity helps the student to understand the likes and dislikes of their friends.
- Distinguishing healthy and unhealthy food: Students could be shown a video on 'Tasty vs healthy food' (https://www.youtube com/watch?v=Td_ucj7F8p4) to explain healthy and unhealthy food. This could be followed by a discussion on why healthy eating is necessary.
- Distinguishing between raw and cooked food: Ask the children to name vegetables and fruits they know and then ask them to categorize based on how they can be consumed (raw, cooked or both).




*Screenshot from the story video*

## Explain

- Different meals: Ask the children to categorize food items into breakfast, lunch or dinner. Encourage them to use names in English and Tamil.
- Dietary needs: Students can interview their family members to study their diet. This could be followed up with a discussion on the varying dietary needs according to age.
- Food types: Explain the importance of types of food (energy giving food, body building food, protective food through a video (https://www.youtube.com watch?v=fHyeUCI1_1s).



*Screenshot from the video*

- Salad making: Make a vegetable/fruit salad with the vegetables/fruits brought by children from home. Ask the children to identify the vegetables/ fruits found in it and also to share the salad with other classes.

## Elaborate

- Children could answer riddles on food items Some riddle cards are printed with this issue Children could also make their own cards.
- Organize a food festival at school. Students could bring food from home and talk about its ingredients, nutritional value – and have some fun tasting different varieties of food!
- Show children examples of food from different parts of the country and the world This will help them understand the diversity of foods and how foods vary from place to place according to availability and climate.

## Evaluation

- Differentiate between healthy and unhealthy food items from a given list
- Classify foods – raw / cooked, from plants animals etc
- Interview elders to analyze how food habits have changed over time.

**Sample riddle cards**

| | |
|---|---|
| *Clue 1*: A Sweet and juicy fruit from a tall tree<br>*Clue 2*: Used widely in temple ceremonies<br>*Clue 3*: Hard outer shell. Sweet fruit inside<br>*Clue 4*: Commonly consumed as chutney<br><br>**Answer card: Coconut** | *Clue 1*: Source of vitamin A, good for eyes<br>*Clue 2*: Eaten raw or cooked<br>*Clue 3*: Commonly orange in colour, but also seen in purple, red, white and yellow<br>*Clue 4*: Comes from the root of a plant<br><br>**Answer card: Carrot** |



**K. Maheswari,** PST, GPS K T Kuppam Pet.

Lesson Ideas

# Anita and the honeybees

**CBSE, EVS Class - IV, Unit - 5**

**Inspire to achieve...**

**K. Raguvaran**

**Lesson Objectives:**

- Value of equal opportunity for all
- Find inspiration from examples of men and women who fought obstacles to come up in life
- Learn about honey bees and apiculture

## Engage:

- Discuss with students about importance of school education.
- Briefly discuss with students about famous inspiring women. Examples could include Puducherry Lt. Governor (first woman IPS officer) Ms. Kiran Bedi, Savitribhai Phule, Malala etc.

**Part 1 – Inspiring lives**

**Whole class discussion:**

Explore the lives of famous and less known people who have overcome difficult circumstances to do well in life and make a difference to the lives of others. Teachers can use story cards/ slide shows or videos for these discussions. This can be followed by students talking about what they found most interesting about the lives of these people. Some video links of stories are given here:

Story of Anita: https://www.youtube.com/watch?v=YYB8eJ-xvUY

Girl Star Series: https://www.youtube.com/results?search_query=Girl+Starsm+Going+to+school+India

**Group work**

Children could write short biographies of the people they found most striking. These biographies can be displayed in the classroom.

**Part 2 -Bee-keeping**

Show videos on how honey bees live and construct their bee hives. Discuss with students about uses of honey (for preservation, as a medicine etc) and bee keeping. An extension of this discussion can be done on how to identify whether the honey we buy from market is adulterated

(1) Using water- pour one drop of honey into half glass of water. If it is not mixing with water and forms lumps at the bottom the honey is pure

(2) Using cotton- dip cotton in some honey, show the cotton to a burning candle if the cotton has a steady flame the honey is pure

(3) Pour one drop of honey on top of your thumb nail, if the drop stays intact the honey is pure.

A series of videos on Honey bee: https://www.youtube.com/watch?v=CL60265xQz4

A Tamil video on apiculture: https://www.youtube.com/watch?v=A5Ivip26bj0

**Part 3 - Economic activities in your village**

Students can be asked to collect various economic activities which are happening around them. They could collect some details about it.

## Evaluate:

Write on "what I want to be": students can write what their dreams are. What would they like to become. Students can be encouraged to pull out instances from the famous personalities that they have learned to write their dreams.

**Story cards to be read:**



*Molai sanctuary- Jadav Molai Payeng is the Forest Man of India. The story narrates how a sixteen year old boy started off on a mission to make the earth greener. Over the years, he has developed 1200 hectares of forest which is now thriving with a rich biodiversity. The story will motivate children that one man's resolution is sufficient to make a difference to the life of generations to come.*



*Story of Raja Mahendra Pratap- This story is an extra ordinary narration of a person's life. All his limbs had to be amputated because of an accident in childhood. He had to stop going to school and stayed at home till the age of sixteen. The story narrates how he continued his studies to finishclass 10, 12 and and go on to complete his MBA.*



*Kiren Bedi- this is the story of the first women IPS officer in India. The lesser know fact about her is that she was one of the best tennis players of her time. The story narrates some incidents from her childhood which show her grit and determination to make a difference.*



**K. Raguvaran,** PST, GPS MadukaraiPet.

Lesson Ideas

# Experiments with Water

**CBSE, EVS Class - V, Unit - 7**

## Enquiry on water

**M. Ramakrishnan**
**E. Maheswari**

**Curricular objectives:** To arouse curiosity about natural environment, develop skills like experimenting, observation, recording, interpreting and recording

**Themes to be covered:** Forms of water, sinking and floating, Substances that mix with / dissolve in water, measuring volume of water

**Classroom experience**

**Sink or Float:**

Students are asked to predict whether different objects will float or sink in a bucket of water e.g. stone, needle, iron nail, pebble, bottle cap, pen cap, pencil, eraser, match stick, paper, leaf, candle, tennis ball, plastic lid, bolt,aluminum foil.They can also predict which objects will floatin water, which will sink quickly or slowly and which will float somewherebetween. It would be useful to design a worksheet that will enable you to record predictionsand subsequent observations of the objects in water with comments.

The teacher can help them understand concepts of density, weight and volume to explain these phenomena.

**Dead Sea experiment:**

A doll is dropped into a bucket of water, it sinks. Students are asked to dissolve salt in water and observe what happens. The experiment can be repeated with potato, lemon and also add enough salt to make the objects remain in float in between (semi-submerged). As the density of water is increased by dissolving salt, the object



(lemon as in below picture) comparatively becomes less dense and hence floats.



**Make layer of float:**

Teacher takes a test tube, water, oil, food coloring and washing liquid. Students pour water and oil in to the test tube, followed by the food coloring and washing gel. Through this experiment, we can explain that not all liquids mix with each other and also relate this to the concept of density.

**Soluble and insoluble:**

Students can try to dissolve different substances in water - salt, sugar, sand, chalk powder, oil, rasna powder, milk, food colour additive,

turmeric powder, etc. This can be used to explain the concept of solubility and insolubility.

**Milk Test:**
